07TH SEPTEMBER 2025


www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 86 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com

## ஹஜ் ஏற்பாடுகள்; ஆராய மக்காவில் உயர் மட்ட மாநாடு



அடுத்த ஆண்டின் ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பாக எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி மக்காவில்

02ம் பக்கம் பார்க்க...

# எல்லை நிர்ணயத்தின் பின்பே மாகாண சபைத் தேர்தல்


## ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு அரசு அறிவிப்பு

நாட்டில் தேர்தல் தொடர்பான விடயத்தில் எல்லை நிர்ணய செயல்முறை முடிந்ததும், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்த அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு வழங்கியுள்ள பதில் அறிக்கையிலேயே, இலங்கை அரசாங்கம், இதனை தெரிவித்துள்ளது.

13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் 2014 முதல் நடத்தப்படவில்லை என்ற மனித உரிமைகள் ஆணையாளரி கருத்துக்காகவே இந்த பதில்

02ம் பக்கம் பார்க்க...




## அமைச்சர் விஜித ஜெனீவா பயணம்



வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் இன்று (07) காலை ஜெனீவாவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நாளை (08) ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள்

03ம் பக்கம் பார்க்க...

## அரச சேவையில் விரைவில் 65,000 பேர் சேர்ப்பு

### மொனராகலை கூட்டத்தில் ஜனாதிபதி அனுர



மொனராகலையில் நடைபெற்ற சிறப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, அரசாங்க சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பது குறித்து கருத்து தெரிவித்தார்.

02ம் பக்கம் பார்க்க...

## அவதூறு பரப்பும் அரசாங்கம், இனியும் பொறுக்க முடியாது!

### சட்ட நடவடிக்கைக்கும் தயார் ஆவேசப்படும் நாமல்!



அரசாங்கம் தொடர்ந்து பல்வேறு போதைப்பொருள் குற்றச்சாட்டுகளில் சிக்கிய குற்றவாளிகளுடன் அரசியல் தொடர்புகளை பேணியதாக எதிர்க்கட்சியினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதன்படி, ஸ்ரீலங்கா

03ம் பக்கம் பார்க்க...

## வானில் இன்று இரத்த நிலவு!



இலங்கையர்கள் இன்று (செப்டம்பர் 7 ஆம் திகதி) அரிதான "இரத்தச் சந்திரன்" (Blood Moon) எனப்படும் வானியல் நிகழ்வைக்

03ம் பக்கம் பார்க்க...

## இம் மாதம் 16லே அஷ்ரப் நினைவேந்தல்

### நினைவுப் பேருரை எம்.ஏ.சுமந்திரன்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம் எச் எம் அஷ்ரபின் 25 வது நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி நிந்தவூர் அல்-அஸ்ரக் தேசிய

03ம் பக்கம்பார்க்க...

## கொலை கலாச்சாரத்துக்கு உடன் முடிவு கட்டுங்கள்

### சஜித் அரசுக்கு அழுத்தம்



"நாடு முழுவதும் துப்பாக்கிச்சூடு மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொலை செய்யும் கலாசாரம் தொடர்ந்தும் வியாபித்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த

02ம் பக்கம்பார்க்க...

## 16 இலங்கை ஊடகவியலாளர்கள் இஸ்ரேலுக்கு விஜயம்





16 இலங்கை பத்திரிகையாளர்களைக் கொண்ட குழு இஸ்ரேலுக்கு வந்துள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதர் நிமல் பண்டாரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம்

03ம் பக்கம்பார்க்க...

## மின்சார கட்டண அதிகரிப்பு மீண்டும் முன்மொழிவு

தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான மறுசீரமைப்பு செயல்முறைகளுக்கு மத்தியில், இலங்கை மின்சார சபை, அடுத்த கட்டண

03ம் பக்கம்பார்க்க...

## சொத்து விபரங்களை சமர்ப்பிக்க தவறிய மூன்று அமைச்சர்கள் 8 பிரதியமைச்சர்கள்

02 >>>




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

# UNDP யின் பூட்டான் நாட்டுக்கான பிரதி வதிவிட பிரதிநிதியாக பாதில் பாக்கிர் மாக்கார்





ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) பூட்டான் நாட்டுக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதியாக இலங்கையைச் சேர்ந்த பாதில் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட அலுவலகத்தில் 13 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றி வந்த பாதில் பாக்கீர் மாக்கார், பேங்கொக்கை தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆசியா பசுபிக் பிராந்தியத்தின் (UNDP Asia Pacific – Bangkok Regional Hub) ஆலோசகராக பணியாற்றி வந்ததோடு இவர் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் புத்திரருமாவார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டுள்ளது.

பெண்களின் பங்கேற்பு 2024 நவம்பரில், இலங்கை அதன் வரலாற்றில் மிகவும் உள்ளடக்கிய நாடாளுமன்றங்களில் ஒன்றை உருவாக்கியது என்றும், இதில் மலையக சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண் உறுப்பினர்கள் மற்றும் பார்வையற்ற ஒருவர் உட்பட பல்வேறு சமூகங்களின் பிரதிநிதிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

இருப்பினும், பிரதமர் உட்பட இரண்டு பெண் அமைச்சர்கள் மட்டுமே அமைச்சரவையில் நியமிக்கப்பட்டுள்ளதை, ஜெனீவா மனித உரிமைகள் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருபத்தி இரண்டு பெண்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது, பெண்களின் பங்கேற்பை 9.8 சதவீதமாக இரட்டிப்பாக்கியது.

எனினும், சராசரியான 22.1 சதவீதத்தை விடக் குறைவு என்று மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சுட்டிக்காட்டியிருந்தது.

## கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில், அரசை நேர்மறையாக விமர்சிக்கும் தரப்பினரைக் கூட அச்சுறுத்தும் திட்டம் ஒன்று சூட்சுமமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பை தக்சலாவா என்ற யூடியூப் சேனலை நடத்தும் இராஜ் வீரரத்ன மற்றும் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் இலக்கத் தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் பல்வேறு நபர்கள் வந்த சம்பவம் இதற்குக் கிட்டிய சம்பவமாகக் காணப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில், சிவில் குடிமக்கள், ஊடகத்துறையில் உள்ளவர்கள் மற்றும் சமூக ஊடக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் பாதுகாப்பின்மை உணர்வு நிலவுகின்றது."- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று ஊடகங்களுக்கு விசேட கூற்றை முன்வைத்து தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,"தற்போதைய ஆளும் தரப்பினர் கடந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது மேசைகள் மற்றும் நாற்காலிகளைக் கொண்டு வாருங்கள், தேசிய பாதுகாப்பு குறித்த டியூசன் வகுப்புகளை எடுக்கின்றோம் எனப் பிரஸ்தாபித்திருந்தனர்.

அப்போது அவ்வாறு சொன்ன இந்த அரசியல் கட்சி நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் இந்தக் கொலைக் கலாசாரம் நகரம் நகரமாக வியாபித்து வருகின்றன.

சமூக ஊடக ஆர்வலர்களுக்கு எதிரான இத்தகைய அச்சுறுத்தல்கள், நாட்டின் அரசமைப்பின் உச்ச சட்டமான மனித வாழ்வுரிமையை மீறும் செயலாக அமைந்து காணப்படுகின்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான இந்த அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்தின் மீது விழுந்த பெரும் அடியாகும். இதைத்தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இராஜ் வீரரத்ன மற்றும் மிலிந்த ராஜபக் ஷ ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் வருகை தந்த, இந்த அடையாளம் தெரியாத சைக்கிள் ஓட்டுநர்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அரசு செய்யும் நல்ல விடயங்களைப் பாராட்டவும், தவறான விடயங்களை விமர்சிக்கவும் சகல குடிமக்களுக்கும் உரிமை காணப்படுகின்றது. அரசின் நடவடிக்கைகளில் எது சரி எது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுவது 220 இலட்சம் மக்களினதும் பொறுப்பாகும்.

இந்த உரிமை மக்களுக்குச் சொந்தமான உரிமையானபடியால், அரசுக்கோ அல்லது குண்டர்களுக்கோ இதனைப் பறிக்க முடியாது.

சமூகத்தை அச்சுறுத்தி வரும் இந்தக் கொலைக் கலாச்சாரத்தை முறியடிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக எங்களால் பெற்றுத் தர முடியுமான அதிகபட்ச பக்க பலத்தை பெற்றுத் தருவோம்.

அரசால் செவிமெடுக்க முடியாத விடயங்கள் யூடியூப் அலைவரிசைகளில் செல்லப்படும் போது, அவ்வாறு விடயங்களை முன்வைப்பவர்களை அச்சுறுத் துவதற்குப் பதிலாக, அரசின் தவறுகளைச் சரி செய்து கொண்டு, நாட்டை முன்னோக்கி நகர்த்தும் பணியையே முன் னெடுக்க வேண்டும்.

சமூக ஊடகங்களிலும் சுதந்திர ஊடகங்களிலும் உண்மையைப் பேசும் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னிற்கும்."

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க சேவைக்கு 62,000 பேரை நியமிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலும், அரசாங்க அமைப்பில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பின்னடைவை சரிசெய்ய இந்த எண்ணிக்கையை ஒரு லட்சமாக (100,000) அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் பெரும்பாலான வாகனங்கள் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்றார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக, அரசாங்க சேவைக்கு புதிதாக 2,000 வாகனங்களை விநியோகிக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சொத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்சம் மற்றும் மோசடி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான சொத்துக்கள் உடமைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதில் மூன்று அமைச்சர்கள் மற்றும் 8 பிரதி அமைச்சர்கள் தமது சொத்து விபரங்களை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் வலைத்தள தகவலின்படி அமைச்சர்களான ராமலிங்கம் சந்திரசேகரன், லால்காந்த, மற்றும் பேராசிரியர் கிருசாந்த அபேசேன ஆகியோரும், பிரதி கடற்றொழில் அமைச்சர் ரத்ன கமகே, வர்த்தக பிரதி அமைச்சர் ஆர் எம் ஜயவர்த்தன, கைத்தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, புத்த சாசன சமய பிரதி அமைச்சர் கனமகெதர திசாநாயக, தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, தொழில்நுட்ப நிறுவன உபகார பிரதி அமைச்சர் நாமல் பிரதர்சன, வெளி விவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோரும் தமது சொத்து விபரங்களை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.


105 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்திருப்பதோடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி உட்பட 71 பேர் தமது சொத்துக்கள் விபரங்களை இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை எனவும் அந்த வலைத்தள அறிக்கை தெரிவிக்கின்றது.

## ஹஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்ட மாநாடு நடைபெறவுள்ளது.இம் மாநாட்டில் இலங்கையின் ஹஜ் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஹஜ் கோட்டா அதிகரிப்பு குறித்து இம் மாநாட்டின் பின் தெரிய வருமென முஸ்லிம் சமய பண்பாட்டலுவ்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எல்.எம். நவாஸ் தெரிவித்தார்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் பேரவையின் 60 வது அமர்வில் கலந்து கொள்வதற்காக அவர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜெனீவாவில் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் அமைச்சர் விஜித ஹேரத் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையேயான விசேட சந்திப்பொன்றும் இதன்போது நடைபெற உள்ளது.

வோல்கர் டர்க்கின் இலங்கை விஜயத்திற்குப் பிறகும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கழித்தும் நடைபெறும் இந்த மாநாட்டில், மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக புதிய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை முன்வைக்க முடியும்.

இந்த ஆண்டு மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமைச்சர் விஜித ஹேரத்துடன், வெளிவிவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகள் பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ்ம் பங்கேற்கவுள்ளார்.

## வானில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு ரசிக்கும் சிறப்பான வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இதை கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறைத் தலைவர், வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவு இயக்குநர் மற்றும் ஆர்தர் சி. க்ளார்க் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் தலைவரான பேராசிரியர் சந்தன ஜயரத்னே தெரிவித்துள்ளார்.

இந்த அற்புதமான வானியல் நிகழ்வு செப்டம்பர் 7 ஆம் திகதி வானத்தை ஒளிரச் செய்ய உள்ளது. சந்திரன் முழு கிரகணத்துக்குள் நுழைந்து, 82 நிமிடங்கள் இரத்த சிவப்பு நிறத்தில் தோன்றும்.

"இரத்தச் சந்திரன்" என அழைக்கப்படும் இந்த நிகழ்வு, இவ்வாண்டின் கடைசி முழுச் சந்திர கிரகணம் ஆகும். உலக மக்கள் தொகையின் சுமார் 85% பேருக்கு காணக்கூடியதாக இருக்கும். பல கிரகணங்கள் குறிப்பிட்ட பகுதிகளிலேயே காணப்பட்டாலும், இம்முறை ஆசியா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா போன்ற பெரும்பாலான பகுதிகளில் காண முடியும். இலங்கையில் மிகவும் தெளிவான காட்சியளிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

எனவே, வானியலையும் விண்வெளி அறிவியலையும் நேசிக்கும் அனைவரும் இந்த அரிதான வானியல் காட்சியை ரசிக்கத் தயாராகுமாறு பேராசிரியர் ஜயரத்னே கூறியுள்ளார்.

செப்டம்பர் 7 ஆம் திகதியன்று இலங்கைக்கான சந்திர கிரகண நேரங்கள் பின்வருமாறு:

பினும்ப்ரல் (நிறெஅடிசயட) கிரகணம் ஆரம்பம்: இரவு 8.58

பகுதி கிரகணம் ஆரம்பம்: இரவு 9.57

முழுக் கிரகணம் ஆரம்பம்: இரவு 11.01

அதிகபட்ச கிரகணம்: இரவு 11.42

முழுக் கிரகணம் முடிவு: காலை 12.22 (செப்டம்பர்)

பகுதி கிரகணம் முடிவு: காலை 1.26 (செப்டம்பர்)

முழுச் சந்திர கிரகணத்தில் சந்திரன் ஆழமான சிவப்பில் தோன்றும் காலம் 1 மணி 22 நிமிடங்கள் நீடிக்கும். முழு நிகழ்வின் காலம், பினும்ப்ரல் ஆரம்பம் முதல் பகுதி கிரகணம் முடிவடையும் வரை, 5 மணி 27 நிமிடங்கள் நீடிக்கும் என்று பேராசிரியர் ஜயரத்னே மேலும் தெரிவித்தார்.

## இம் மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை காசிம் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது. இம்முறை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரது நினைவுரையை தமிழர் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம் ஏ சுமந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தத்திற்கான தனது முன்மொழிவை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையத்திடம் இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த முன்மொழிவை, மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

எனினும், பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்களின் விபரங்களை அவர் வெளியிடவில்லை.

இந்தநிலையில், பொது பயன்பாடுகள் ஆணைக்குழு, இந்த வாரம் குறித்த முன்மொழிவை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல்களின்படி, இலங்கை மின்சார சபை, 6.8 வீத மின்சாரக்கட்டண அதிகரிப்பை கோரியுள்ளதாக தெரியவந்துள்ளது.

## 16...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்த இந்தப் பயணம், வெளியுறவு அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்புகளை பத்திரிகையாளர்களுக்கு வழங்கும் என்று பண்டாரா குறிப்பிட்டார்.

காசா பகுதியில் மனிதாபிமான உதவி நடவடிக்கைகளையும் எங்கள் பத்திரிகையாளர்கள் கவனிப்பார்கள் இது இஸ்ரேலின் கள யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதில் ஒரு முக்கிய பகுதியாகும் என்று நிமல் பண்டாரா தெரிவித்துள்ளார்.

தூதர் தூதுக்குழுவிற்கு ஒரு இரவு விருந்து அளித்தார். இதில் இலங்கையில் உள்ள இஸ்ரேலின் தூதர் ஜெனரல் தினேஷ் ரோட்ரிகோ, வடக்கு இஸ்ரேலில் உள்ள இலங்கையின் தூதர் டாக்டர் அன்னெட் பெர்ன்ஸ்டீன் ரீச் மற்றும் துணைத் தலைவர் ஹேமந்த ஏகநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## அவதூறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் நாமல் ராஜபக்ஷ, அரசாங்கம் தமது கட்சிக்கு எதிராக பல்வேறு அவதூறு பிரச்சாரங்களை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் இன்று (செப்டம்பர் 06, 2025) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, அரசாங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும் அவதூறு பிரச்சாரங்களை இதுவரை பொறுமையாக பொறுத்து வந்தாலும், இனி அத்தகைய பொறுமையைக் கடைப்பிடிக்கப் போவதில்லை என வலியுறுத்தினார்.

"தங்கக் குதிரைகள் கதை, டுபாய் மாரியட் ஹோட்டல் கதை, உகாண்டாவில் பணம் தொடர்பான கதை, ரொக்கட் கதை உள்ளிட்ட பல அவதூறு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது கன்டெய்னர் சம்பவத்தை மையமாக வைத்து மீண்டும் அவதூறு பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் நடவடிக்கை எடுப்போம்," என்று நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்தார்.

கன்டெய்னர் சம்பவம் தொடர்பாக பேசிய நாமல் ராஜபக்ஷ, "கடந்த ஜனவரி மாதம் துறைமுகத்தில் எந்தவித பரிசோதனையும் இன்றி விடுவிக்கப்பட்ட 323 கன்டெய்னர்கள் எங்கே உள்ளன? அவற்றில் கொண்டு வரப்பட்ட பொருட்கள் என்னவென்பதை அரசாங்கம் வெளிப்படுத்துமா?" என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், இந்த கன்டெய்னர் சம்பவத்தை மையமாக வைத்து, அரசாங்கம் உரிய முறையில் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல், எதிர்க்கட்சி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்காமல், ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக அவதூறு பிரச்சாரங்களை மேற்கொள்வது கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"வேதியியல் பொருட்கள் அடங்கிய கன்டெய்னர்கள் துறைமுகத்தில் பரிசோதிக்கப்படாமல் வெளியே அனுப்பப்பட்டதா? இது தொடர்பாக நியாயமான சந்தேகம் எழுகிறது," என்று கூறிய அவர், இது குறித்து அரசாங்கத்திடம் விளக்கம் கோருவதாகவும் தெரிவித்தார்.

நுவரெலியாவில் 'ஐஸ்' போதைப்பொருள் உற்பத்திக்காக நிலம் வழங்கப்பட்டது எவ்வாறு என்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து வெளிப்படையாக விளக்க வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் பாதாள உலக வெடிப்புகளை தடுக்க அரசாங்கத்தால் முடியவில்லை எனவும், அரசாங்கம் எதிர்க்கட்சியை அவதூறு செய்யவே முயற்சிக்கிறது எனவும் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார். "இத்தகைய நிலைமைகளை உடனடியாக மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும், 323 கன்டெய்னர்கள் விடுவிக்கப்பட்டது மற்றும் அவற்றில் இருந்த பொருட்கள் குறித்து நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக விளக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு தாம் சவால் விடுப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## காலஞ்சென்ற தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் 28 ஆவது நினைவு தினம்

இலங்கை பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகராகவும், அமைச்சரவை அமைச்சராகவும், ஆளுநருமாக திகழ்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் 28 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஆங்கில ஒலிபரப்புச் சேவைகளில் அன்னாரின் நினைவுரைகள் பின்வரும் நேரங்களில் ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செப்டம்பர் 10

01. சிங்கள சேவை- மாலை 05.00 மணிக்கு

இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்த லால் டி அல்விஸ்

02. தமிழ்ச் சேவை -இரவு 07.15 மணிக்கு


நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீவன் தொண்டமான்

03. முஸ்லிம் சேவை- இரவு 08.05 மணிக்கு

வைத்தியர் ரயீஸ் முஸ்தபா, தலைவர், ஐக்கிய இராச்சிய இஸ்லாமிய அறக்கட்டளை

04. ஆங்கில சேவை

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் திலக் டி சொய்ஸா

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 AUGUST 10 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# கல்விச் சீர்திருத்தத்தில் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும்

புதிய கல்விச் சீர்திருத்தம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு உயர்கல்வி அமைச்சானது தீவிரமாக செயல்பட்டு வருகின்றது. கல்விச்சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதானது நாட்டில் இன்று அத்தியாவசியமானதாக உள்ளது. மாணவர்கள் பாடப் புத்தகங்களில் மட்டும் தங்கியிருக்காது சிந்தனைகளை மேம்படுத்துவதற்கான கல்வித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதிலேயே கல்வி அமைச்சு அதிக அக்கறை காட்டி வருகின்றது.

நாட்டின் கல்வி நிபுணர்கள் பலரையும் உள்ளடக்கிய குழுக்களை அமைத்து கல்விச் சீர்திருத்தத்தை தயாரித்து வருகின்றது. குழுவில் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த கல்வியலாளர்கள் உள்ளடக்கப்படுவது அவசியமாகும். கல்விச் சீர்திருத்தம் ஒரு இனத்துத்துக்கோ ஒரு மதத்துக்கோ உரியதல்ல. முழு நாட்டு மக்களுக்கு உரியதாக அமைதல் அவசியமாகும்.

கல்வி அமைச்சின் கொள்கை பரப்புதலுக்குப் பொறுப்பானவர்கள் இது பற்றி அவசியம் கரிசனை கொள்ள வேண்டும்.அண்மைக்காலமாககல்விஅமைச்சில்நியமிக்கப்பட்ட பல குழுக்களில் சிறுபான்மையினர் இடம்பெறாதமை குறித்து விமர்சனங்கள் பல எழுப்பப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் கல்வி அமைச்சின் அங்கத்தவர்கள் பரந்த நோக்குடன் செயல்படுவது அவசியமாகும்.

நாட்டின் சகல தரப்பினரது கருத்துக்களையும் உள்வாங்கி கல்வித்திட்டம் வகுக்கப்படும் போதே அது வெற்றிகரமானதொரு கல்வித் திட்டமாக அமையும். சிறுபான்மை அமைப்புகள் அரசியல் தலைவர்கள் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் கல்வி சீர்திருத்தங்களை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு ஆலோசனைகளை முன் வைக்க வேண்டும். அதற்கான ஆதரவுகளையும் வழங்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக்களினூடாக ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கல்வி சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது. உலகின் நவீன போக்குக் கேட்ப நாட்டின் கல்விச் சேவை மேம்படுத்தப்படுவது அவசியமாகும். எனவே இது குறித்து அனைத்து தரப்பினரும் அக்கறையோடு செயல்படுவது காலத்தின் தேவையாகும்.

# பேருவளையில் நடைபெற்ற மீலாத் நடைபவணி





(பீ.எம் முக்தார்)

பேருவளை கெச்சிமலை அஷ்ரபியா அரபுக் கல்லூரி பழைய மாணவர்களினால் இறைத்தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் 1500 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பபட்டிருந்த மாபெரும் மீலாத் ஊர்வலம் (நடைபவணி) 06 ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி பழைய மாணவர் மௌலவி அல் ஹாஜ் முஹம்மத் ரிபாக் (அஷ்ரபி) தலைமையில் பேருவளை ஷேக் ஜமால்தீன் வீதியில் உள்ள ஹாஜியார் அப்பா தக்கியா முற்றவெளியில் இருந்து ஆரம்பமாகி பேருவளை மொல்லியம்மலை ஹிழ்ரிய்யா ஜூம்ஆ பள்ளிவாசல் வந்தடைந்தது.

முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாபெரும் மீலாத் ஊர்வலத்தில் சங்கைக்குறிய ஸாதாத்மார்கள், உஸ்தாத்மார்கள் உலமாக்கள், அஷ்ரபியா அரபுக் கல்லூரி அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பேருவளை பகுதியில் உள்ள அரபு கல்லூரிகளின் மாணவர்கள், குர்ஆன் மத்ரஸா மாணவர்கள் ஹிப்புளுள் குர்ஆன் மதரஸா மாணவர்கள், அஹதிய்யா மாணவர்கள், பிரதேச வாழ் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நடைபவணி சென்ற சமயம் பிரதேசவாசிகள் பன்னீர் தொளித்து வரவேற்றமையும் குறிப்பிடத்தக்கது. நடைபவணி முடிவில் ஹிழ்ரியா பள்ளிவாசலில் மாணவர்களுக்கு இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் தலைமுடியும் காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நடைபவணியில் பங்குபற்றிய மற்றும் பல்வேறுவகையிலும் ஒத்துழைப்பும் நல்கிய அனைவருக்கும் மௌலவி முஹம்மத் ரிபாக் (அஷ்ரபி) நன்றி தெரிவித்தார்.

பேருவளை பொலீஸ் நிலை போக்குவருத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஜயந்த வடகெதர இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் நல்ல பண்பாடுகளின் மற்றும் முன்மாதிரிகள் குறித்து உரையாற்றினார்.






# ஜனாதிபதி அனுர தலைமையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழா!

























தேசிய மீலாதுன் நபி விழா ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இன்று (05) பிற்பகல் அம்பலாந்தோட்டை, மெலே கொலனி கிராமத்தில், மஸ்ஜிதுல் அரூஸியா ஜூம்ஆ பள்ளிவாசல் மைதானத்தில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இஸ்லாமிய மதத் தலைவர் முஹம்மது நபியின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் இந்த தேசிய விழா ஏற்பாடு செய்யப்பட்டதுடன், பிரதேசத்தின் மகா சங்கத்தினர் உட்பட அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்களின் ஆதரவும் பங்களிப்பும் இதற்கு கிடைத்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

2025 தேசிய மீலாதுன் நபி விழாவிற்காக வெளியிடப்பட்ட நினைவு முத்திரை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் கலாசார மற்றும் வரலாற்றுப் பெறுமதியை மையமாகக் கொண்டு தொகுக்கப்பட்ட "ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் வரலாறு மற்றும் வளர்ச்சி" என்ற நூலும் வழங்கி வைக்கப்பட்டது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் இன, மத பேதமின்றி அனைத்து மாணவர்களிடையே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக நடத்தப்பட்ட சித்தரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பங்கேற்றார்.

2025 தேசிய மீலாதுன் நபி விழாவில் பங்கேற்றதற்காக ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்ட முஸ்லிம் மக்களும் முஸ்லிம் ஜ/ம்மா பள்ளிவாசலின் நிர்வாக சபையும் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பரிசையும் வழங்கின.

இலங்கையின் ஹஜ் யாத்திரை ஒதுக்கீட்டை மேலும் அதிகரிப்பது குறித்து தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக, இந்த விழாவில் உரையாற்றிய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி தெரிவித்தார். அதன்படி, இந்த நாட்டில் உள்ள முஸ்லிம்களின் ஹஜ் யாத்திரைக்காக செலவிட வேண்டிய தொகையைக் குறைக்கவும், யாத்ரீகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

எல்ல-வெல்லவாய பிரதான வீதியில் நேற்று (04) இரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் இரங்கலையும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், அமைதி, ஒற்றுமை மற்றும் ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துதல் ஆகியவை நபிகள் நாயகத்தின் வழிகாட்டுதல்கள் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்து மக்களிடையேயும் அமைதியும் நல்லிணக்கமும் நிலைநாட்டப்படும் ஒரு அழகான நாடு என்பதே தற்போதைய அரசாங்கத்தின் அபிலாஷை என்று சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், 2025 தேசிய மீலாதுன் நபி விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு அப்பகுதி மக்கள் பெரும் பங்களிப்பை வழங்கியதை நினைவு கூர்ந்ததுடன், இந்த ஒற்றுமை ஒரு அழகான நாட்டின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார்.

மகா சங்கத்தினர் மற்றும் மதத் தலைவர்கள், பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி,புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திஸ ாநாயக, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவன் செனரத், ஹம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நிஹால் கலபத்தி உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. சேனாதீர, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் ஆகியோருடன் அரச அதிகாரிகள், வெளிநாட்டு தூ துவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ரணிலின் கைதும் எதிர்க்கட்சிகளின் புத்துணர்ச்சியும்!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



அரச நிதி ஒரு கோடி 66 இலட்சம் ரூபாவை தவறாக பயன்படுத்தியதாக குற்றம்சாட்டி குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் 2025.08.22 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க 2025.08.26 ஆம் திகதி தளா 50 இலட்சம் ரூபா கொண்ட 03 சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இந்த வழக்கு தொடர்பான அடுத்த விசாரணை 2025.09.29 ஆம் திகதி கொழும்பு கோட்டை மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நடைபெற இருக்கின்றது. 22 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே ரனில் விக்கிரமசிங்காவை 26 ஆம் திகதி வரை நான்கு நாள் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. ரனில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 26 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கோட்டை நீதிமன்ற வளாகத்தில் பெருமளவான ஆதரவாளர்கள் குழுமி இருந்தனர். அத்துடன் கட்சி பேதமற்ற முறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சமூகமளித்திருந்தனர்.

ரனிலுக்கு பிணை வழங்கப்படுமா அல்லது தடுப்புக்காவல் உத்தரவு நீடிக்கப்படுமா என்ற சந்தேகங்கள் நீடித்த நிலையில் அவரின் உடல் நிலையை கவனத்தில் எடுத்து மருத்துவர்களால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையை கவனத்தில் கொள்ளப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலை தொடர்பாக இருந்து வருகின்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டிருக்கின்றது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 06 பேர்கள் கொண்ட மருத்துவர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். ரனிலை பிணையில் விடுவிப்பதற்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கருத்து தெரிவிக்கையில் சட்டத்தின் ஆட்சி நிலவுவதாகவும் நீதித்துறை சுயாதீனமாக செயற்படுவதாகவும் திருப்தி வெளியிட்டனர். அத்துடன் இந்த தீர்ப்பு தொடர்பாக யாருக்கும் எந்தவிதமான சந்தேகங்களையும் எழுப்ப முடியாது. அவ்வாறு கேள்வி எழுப்பினால் அல்லது தீர்ப்பை விமர்சனம் செய்தால் அது நீதிமன்றத்தை அவமதித்ததாக அமையலாம். ரனில் விக்கிரமசிங்காவின் உடல் நிலை கவனத்தில் எடுக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படாமல் ஸூம் தொழில்நுட்பம் மூலம் நீதிவானுடன் தொடர்புபடுத்தபப்பட்டே பிணை வழங்கும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இருந்தாலும் ரனிலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட 26 ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். எதிரணி அரசியல் வாதிகளும் ரனில் ஆதரவாளர்களும் நீதிமன்றத்தின் சுயாதிபத்தியத்துக்கு அச்சுறுத் தலாக செயற்பட்டனர், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக நடந்து கொண்டனர், அதனால் பிணை வழங்கப்பட்டது என்றெல்லாம் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது குறித்து ரனில் ஆதரவாளர்களும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளும் கருத்து தெரிவிக்கையில் நாம் ஒருபோதும் நீதிமன்ற சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் உண்டு பண்ணவில்லை, ஆனாலும் ஜனநாய கத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதால் அதற்கு எதிராகவும் அரசியல் அராஜகத்திற்கு எதிராகவும் ஒன்று திரண்டு போராடினோம் என்று தெரிவிக்கின்றனர்.

ரனிலுக்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா, நாமல் ராஜபக்ஷ, மனோ கனேசன், பழனி திகாம்பரம், பாடலி சம்பிக்க ரணவக்க, ஆகியோரும் ஸ்ரீ.ல.சு. கட்சி உறுப்பினர்கள், ஐ.தே.கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் உட்பட பெருமளவானவர்கள் நீதிமன்ற வளாகத்தில் சமூகமளித்து ரனிலுக்கான தீர்ப்பை அவதானித்த வண்ணம் இருந்தனர். ஏற்கனவே கடந்த காலப்பகுதிகளில் ரனில் விக்கிரமசிங்கா மீதான மேலும் பல குற்றச்சாட்டுக்களும் உள்ளன. இலங்கை மத்திய வங்கி பிணை முறி ஏலவிற்பனையில் இடம்பெற்ற 1300 கோடி ரூபா மோசடி, இருக்கின்றது என்ற அடிப்படையில் வாதங்களை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் ரனில் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகளான திலக் மரப்பண, அனுஜா பிரேமரத்ன ஆகிய சட்டத்தரணிகள் ரனிலின் கைது முறையற்றது என்றும் அவரின் உடல்நிலையில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமைகள் என்பவற்றை காரணம் காட்டி பிணை வழங்குமாறு கோரி இருந்தனர்.

இவ்வாறாக முடிவடைந்த ரனில் நாடகத்தின் மறுபக்கமாக பல வினாக்க்ள எழுந்துள்ளன. உண்மையாகவே ரனில் தடுப்புக்காவலுக்காக வெலிக்கடை சிறைக்கு அனுப்பியவுடன் நோய்வாய்ப்பட்டாரா? அவர் தொடர்பாக வழங்கப்பட்ட டருத்துவ அறிக்கை நம்பத்தக்கதா? என்றெல்லாம் சந்தேகங்கள் கிளப்பப் பட்டுள்ளன. ஏனெனில் ரனில் விக்கிரமசிங்கா ஆஸ்பத்திரியில் இருந்த போது அடிக்கடி தகவல்களை வெளியிட்டது கொழும்பு பெரியாஸ்பத்திரியின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ருக்ஷான் பெல்லன ஆவார். ஆனாலும் பொதுவாக முக்கியஸ்தர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டால் அது தொடர்பாக கருத்து தெரிவிப்பது அல்லது அறிக்கை விடுவது ஆஸ்பத்திரி பணிப்பாளர் பிரதீப் விஜேசிங்க ஆவார். ஆனாலும் ரனில் விடயத்தில் அவரால் எந்த கருத்தும் தெரிவிக்கப்படாமல் ருக்ஷான் பெல்லன மாத்திரம் ஏன் கருத்து வெளியிட்டார் என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

அத்துடன் இந்த ருக்ஷான் பெல்லன என்பவர் ரனில் ஆதரவாளர் என்றும் கொழும்பு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர்களில் ஒருவர் என்றும் தேசிய மக்கள் சக்தி தரப்பில் இருந்து சந்தேகங்கள் கிளப்பப்பட்டு இருக்கின்றன. அதேபோன்று ஏற்கனவே ரனிலுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டி வரும் என்று நீதிமன்றத்திற்கு அறிக்கை வழங்கப்பட்டிருந்த நிலையில் ரனில் இனி தனியார் மருத்துவ மணையொன்றில் சிகிச்சை பெறலாம் என்றும் மூலை வழமையான நிலையில் இயங்கினால் அவரால் அரசியலில் ஈடுபடவும் முடியும் என்ற அடிப்படையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் நாட்டில் வித்தியாசமான கண்ணோட் டங்களை ஏற்படுத்தி இருக்கின்றதை அவதானிக்க முடிகின்றது. அவர் தொடர்பாக சுகாதார அமைச்சு ஒழுக்காற்று விசாரணை நடத்தவும் நடவடிக்கைகள் எடுக்க ப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில் ரனில் ஆஸ்பத்திரியில் இருந்து வீட திரும்பி இருக்கின்றார். அத்துடன் தேசிய பட்டியலில் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட ரனிலின் கட்சி காரரை பதவி விலகச் சயெ்து அந்த இடத்திற்கு ரனில் விக்கிரமசிங்காவை பாராளுமன்றத்திற்கு நியமிக்க இருப்பதாகவும் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இவ்வாறிருக்க ரனிலின் கைதுடன் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற பிரதான கட்சிகள் பல ஒன்று சேர்ந்துள்ளன. 202608.26 ஆம் திகதி மற்றும் 27 ஆம் திகதிகளில் அந்த கட்சிகளின் தலைவர்கள் கொழும்பில் ஒன்று கூடி கலற்துரை யாடல்களை செய்துள்ளனர். அந்த கலந்துரையாடல்களில் நாட்டின் முக்கியமான அரசியல் தலைவர்களை இந்த அரசாங்கம் வேட்டையாடுவதாகவும் அதற்கு எதிராக போராட வேண்டும் என்றும் பேசப்பட்டு அதன்படியே அனைவரும் ஒன்றிணைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் மறைமுக காரணம் ஒன்றும் இருக்கின்றது. இவ்வாறாக இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன் முறையாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரை அவர் பதவியில் இருக்கின்ற போது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று அரசியல் அமைப்பு குறிப்பிட் டாலும் ஓய்வு பெற்ற பின்னராவது பெரியளவில் இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது ஒரு ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்படுத்தி கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 04 நாட்களுக்காவது தடுப்புக்காவலில் வைக்கப் பட்டதால் ஏனைய அரசியல்வாதிகளுக்கு ஒருவிதமான மனக் குழப்பம் ஏற்பட்டி ருக்கின்றது.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனா போன்றோர் மீதும் எந்த நேரத்திலும் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் வரும் வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகின்றது. அதனால் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களை ஒன்று திரட்டுவது அவ்வாறான ஒரு நிலை வந்தால் மக்கள் ஆதரவை காட்டி எப்படியாவது சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடலாம் என்ற எதிர்பார்ப்பும் இருக்கின்றது. அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவிக்கையில் நாம் ஊழலுக்கு எதிரானவர்கள். ஆனாலும் ஜனநாயக விரோத அரசியல் பழிவாக்களை கண்டிக்கிறோம் என்றார். மறுபுரமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா அண்மையில் பிக்குமார் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் பேசும் போது இதுகால வரையில் சட்டத்தை உரிய முறையில் பயன்படுத்த தவறி இருந்தால் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் அனைவரும் சமமான வர்கள். குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை அனுபவிக்க நேரிடலாம். ஊழமுக்கு எதிராக முன்னே வைத்த காலை பின்னால் நகர்த்த மாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரபலமான பாதாள மற்றும் போதைப் பொருள் கடத்தல், விநியோக நடவடிக“கைகளில் ஈடுபட்டு வந்த முக்கியமான புள்ளிகள் ஐந்து பேரை சர்வதேச பிடி விராந்தின் அடிப்படையில் இலங்கை புலனாய்வு குற்றத்தடுப்பு பீரிவினர் கைது செய்து இந்தோனேசியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வந்துள்ளனர். பெகோ சமிந்த, கெஹெல் பத்தர பத்மே, தம்பிலி லஹிரு, பாணந்துரை நிலங்க மற்றும் கொமாண்டோ சலிந்து ஆகிய ஐந்து பேரையும் கைது செய்து அழைத்து வந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விரிவான முறையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். இவர்களிடம் கடந்த காலப்பகுதியில் இந்த நாட்டில் இடம்பெந்ந கொலைகள், கொல்லைகள், போதைப் பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களுக்கு பின்னணியில் இருந்து உதவி செய்தவர்கள் யார் யார் என்ற விபரங்கள் வெளி வர ஆரம்பித்திருக்கின்றன. இவர்களோடு தொடர்பு வைத்திருந்த பல அரசியல்வாதிகளின் பெயர் பட்டியல் ஒன்று விரைவில் குற்றப் புலனாய்வு விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் மூலம் வெளியாகியவுடன் மேலும் பல முன்னால் அமைச்சர்கள் கைது செய்யப்பட இருக்கின்றன என்ற தகவல்களும் வெயியாகி உள்ளன.

அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் அரசியல் மேற்பரப்பு ரனில் விக்கிரம சிங்கா கைது செய்யப்பட்ட போது ஏற்பட்டதை விட மிக மோசமான முறையில் சூடு பிடிக்க இருக்கின்றது. இப்போது அதுரலியே ரத்ன தோரர் வேறொரு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரை விடுவிக்க சிங்கள அமைப்புக்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் அமைப் பொன்று தோன்றி குரல் எழுப்பி வருகின்றது. அதுரலியே ரத்ன தேரர் நாட்டுக்காக சேவை செய்தவர் என்றும் மாவில் ஆறு அனை புலிகளால் மூடப்பட்ட போது அதனை மஹிந்த ராஜபக்ஷவிடம் பேசி திறக்க பின்புலத்தில் இருந்து உதவிய தேசிய வீரர் என்றும் அத்தகையவர்களை கைது செய்வது தவறு என்றும் போராட்டம் ஆரம்பமாகி இருக்கின்றது. அத்துடன் ஏற்கனவே முன்னாள் அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன, நிமல் லன்சா, சசீந்திர ராஜபக்ஷ ஆகியோரும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ளனர். இத்தகைய கைதுகள் அரசியல் பழிவாங்கல்கள் என்று தெரிவிக்கப்பட்டாலும் தகுந்த காரணங்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டு மன்றில் ஆஜர் செய்யப்பட் டிருப்பது தெளிவாகின்றது. எவ்வாறோ இத்தகைய கைதுகள் காரணமாக ஏற்பட்டுள்ள புதிய எதிர்க்கட்சி அரசியல் கூட்டணியும் ஒற்றுமையும் எவ்வளவு காலத்திற்கு எதுவரை நீடிக்கும் என்பதை சற்று பொருத்திருந்தே பார்க்க வேண்டும்.



# கிழக்கு மாகாணக் கல்விப் புலத்தில் நிலவும் நிர்வாகத் தாமதங்களை சீர்படுத்த இம்ரான் எம்.பி கோரிக்கை

கிழக்கு மாகாண கல்வியமைச்சு, கல்வித் திணைக்களம் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் நிலவும் நிர்வாகத் தாமதங்களை சீர்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ஷரூப் கிழக்கு மாகணக் கல்வி அமைச்சு செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பாக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஆசிரியர்களால் அனுப்பப்படும் கடிதங்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து உரிய காலத்தில் பதில் அனுப்பப்படுவதில்லை எனவும் இதனால் தாம் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆசிரியர்களது பதவி உயர்வு, பதவியில் உறுதிப்படுத்தல், வெளிநாடுகளுக்கான சமய யாத்திரை விடுமுறை, வெளிநாடுகளுக்கான சம்பளமற்ற விடுமுறை, மாகாணங்களுக்கான இடமாற்றம், ஓய்வு விண்ணப்பம் உள்ளிட்ட பல விடயங்களுக்காக ஆசிரியர்களால் முன்வைக்கப்படும் கொரிக்கைககள் வலயக் கல்வி அலுவலகங்களில் வாரக்கணக்கில் தாமதிக்கப்படுவதாகவும், அதேபோல மாகாணக் கல்வித் திணைக்களம், மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றில் வாரக் கணக்கில் தாமதிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அலுவலகங்களுக்கு நேரில் சென்றாலும் விடயத்துக்குப் பொறுப்பானவர்களால் சரியான பதில் வழங்காது அலைக்கழிக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்திற் கொண்டு கிழக்கு மாகாணக் கல்வி புலத்தில் நிலவும் இந்த நிர்வாகத் தாமதங்களை சீர்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கரையோர பூங்காக்கள் அமைக்கும் திட்டம் சாய்ந்தமருதில் அங்குரார்ப்பணம்





**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அரசாங்கத்தின் 100 பசுமையான கரையோரப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்துக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவினால் சாய்ந்தமருது சதுக்கத்தை அண்மித்த பிரதேசத்திலும் மற்றும் கல்முனை - 2B ஆகிய பிரதேசங்களிலும் அடிக்கல் நாட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிகா மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர் எம். துலஷிதாஸன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குறித்த இத்திட்டம் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் முன்மொழிவுக்கு அமைவாக, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப் படுகிறது. இன்னும் 8 பூங்காக்கள் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அனுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலயத்தில் இருந்து சமூக விஞ்ஞான போட்டி நிகழ்ச்சிகளில் போட்டியிட்டு மாகாண மட்டத்தில் தெரிவாகி அகில இலங்கை மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள ஏஹியா ரனா என்ற மாணவியுடன் அதிபர் ஏ.எம்.நியாஸ் , உதவி அதிபர் ஏ.ரீ.மன்சூர் மற்றும் பொறுப்பாசிரியர் எஸ்.எப்.நஸ்மிலா பானு ஆகியோர் எடுத்துக் கொண்ட படம் .

**(படம்.எம்.ரீ.ஆரிப்)**

# முஷர்ரபாவுக்கு ஜனாதிபதி சான்றிதழும் பணம் பரிசும் வழங்கி வைப்பு

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் மாணவி முஷர்ரபா முஅன்னஸ் ஜனாதிபதி பாராட்டு சான்றிதழையும் 100000 ரூபா அன்பளிப்பையும் பெற்றுக் கொண்டார்.

2003ஃ2004 ஆம் ஆண்டுகளில் மாவட் ட மட்டத்தில் அதிசிறந்த சித்தி Z-score பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் சப்ரகமுவ மாகாண பாராட்டு நிகழ்வு கடந்த வாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது இவர் இச்சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.



இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து தமிழ் மொழி மூலம் தகுதி பெற்ற ஒரே மாணவி இவராவார் பலாங் கொடை இஃகனகநாயகம் தேசியக் கல்லூரியின் மாணவியும் பலாங்கொடை இஃஜெயிலானி தேசியப் பாடசாலையின் பழைய மாணவியுமான இவர் பலாங்கொடை பிரதேச சமூக ஆர்வலர் எம்.எஸ்.எம்.முஅன்னஸ் தம்பதிகளின் ஏக புதல்வியும் ஆவார்.

கபொத சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்தியையும் கபொத உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்தியையும் 2.1644 Z- score புள்ளிகளையும் பெற்று இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக சித்தி பெற்ற மாணவியாகவும் திகழ்கிறார்.

இவரது வெற்றிக்காக பங்களிப்பு செய்த அதிபர்கள் ஆசிரியர்கள் அதிகாரிகள் உட்பட ஒத்துழைப்பு களை வழங்கியவர்கள் அனைவருக்கும் தனது நன்றிகளை இவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான கலாச்சார போட்டிகள்





**(றிபாஸ்)**

நீர்கொழும்பு கல்வி வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான இஸ்லாமிய கலாச்சார போட்டிகள் அல்பலா கல்லூரியில் (05) நடைபெற்றது.

கல்லூரியின் பிரதி அதிபர் எம். எம்.எம். சதீஸ்கான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி வலயத்தின் பிரதிக்கல்வி பணிப்பாளர்களான ஆர்.டி.என். சீ. சந்திரசேனா, எஸ். எஸ். ஆர். பெர்ணாண்டோ ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ. எம். எஸ். துஸ ாரி ஆசிரியர் ஆலோசகர் திருமதி காஞ்சனா சிவகுமார், அதிபர் எம். யூ.எம்.பாயிஸ் உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவ மாணவிகள், என பலரும் கலந்து கொண்டனர்.

# மத்ரஸதுல் முஹம்மதியா பகுதி நேர ஹிப்ழ் மத்ரஸாவில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு





**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

மத்ரஸதுல் முஹம்மதியா பகுதி நேர ஹிப்ழ் மத்ரஸாவில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு மஸ்ஜிதுல் முஹம்மதியா ஜூம்மா பெரிய பள்ளிவாசலில் (31) இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஜே.எம்.ஜெம்ஸித் என்ற மாணவனின் கிராத்தினை தொடர்ந்து வரவேற்புரையினை மௌலவி ஏ.ஆர் ஜீஸான் தப்லிகி உரையாற்றினார்.

அதனை தொடர்ந்து விஷேட உரையை மௌலவி எம்.எம்.தௌபீக் உரையாற்றியதோடு, மத்ரசா உருவாக்கப்பட்ட நோக்கம், சிறப்பு, வளர்ச்சி பற்றி மௌலவி பி.எம். ரிபாஸ் தெளிவாக எடுத்துரைத்தார்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மிக சிறமத்திற்கு மத்தியில் கல்வி பயின்று வருவதாகவும், அவர்களுக்கு மார்க்க கல்வி மட்டுமல்லாது கணிதம் ஆங்கிலம் போன்ற பாடங்களையும் கற்பிக்கப்போவதாகவும் அதற்கான ஆசிரியர்கள் தாமாக முன்வந்து இருப்பதாகவும் தெரிவித்தார். அத்தோடு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர்களில் பங்களிப்பு மிக முக்கியம் எனவும் சுட்டிக்காட்டியதோடு, இம்மத்ரஸ ாவானது தற்காலிகமாக பள்ளிவாசல் கட்டிடத்திலேயே இயங்கி வருவதாகவும், இதற்கான ஒரு தனியான கட்டிடம் அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பெற்றோர்களால் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மஸ்ஜிதுல் முஹம்மதியா ஜூம்மா பள்ளிவாசலின் தலைவரும், மத்ரசதுல் முஹம்மதியாவின் தலைவருமான எம்.எஸ்.எம். வசீர், பள்ளிவாசலின் செயலாளர், பொருளாளர் உட்பட மத்ரஸாவின் முன்னைய உறுப்பினர்கள், பெற்றோர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்களின் நாடளாவிய ரீதியாக நடைபெற்று வரும் “Srilankan day” திட்டத்தின் அறிமுக நிகழ்வொன்று கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. கேகாலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் குசும் பண்டார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கேகாலை கலாச்சார அலுவல்கள் அமைப்பின் இணைப்பு அதிகாரி சௌமிய ஆரியரத்ன, மத விவகார கலாச்சார திணைக்கள அதிகாரியும் கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளருமான பாத்திமா சானாஸ் மற்றும் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், கலைஞர்களும் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**(படம்: பாரா தாஹீர்)**

# சீனாவில் நடைபெற்ற ராணுவ அணிவகுப்பும்... சர்வதேச தலைவர்களும்...


எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

சீன தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற ராணுவ அணிவகுப்பு விழாவில் ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன், ஈரான் அதிபர் மசூத் பெஜேஷ்கியன் உள்பட சீனாவின் 26 நட்பு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்துகொண்டனர்.

சீனாவின் நவீன ஏவுகணைகளும் ராணுவத் தளவாடங்களும் போர் விமானங்களும் இந்த அணிவகுப்பு நிகழ்ச்சியில் காட்சிபடுத்தப்பட்டன.

ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை திறந்தவெளி வாகனத்தில் சென்று ஏற்றுக்கொண்ட ஷி ஜின்பிங், ”எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் சீனா அஞ்சாது, மனிதகுலமானது போர் அல்லது அமைதி ஆகியவற்றில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் சூழலுக்கு மீண்டும் தள்ளப்பட்டுள்ளது” என்றார்.

“வெளிநாட்டு படையெடுப்பாளர்களிடம் இருந்து சீனா சுதந்திரம் பெறுவதற்காக அமெரிக்கா அளித்த மகத்தான ஆதரவையும், அமெரிக்கர்கள் சிந்திய ரத்தத்தையும் அதிபர் ஜின்பிங் குறிப்பிடுவாரா என்பது மிகப்பெரிய கேள்வி.

சீன வெற்றிக்காக பலியான அமெரிக்கர்கள் மதிக்கப்படுவார்கள், நினைவுகூரப்படுவார்கள் என்று நம்புகிறேன். அமெரிக்காவுக்கு எதிராகச் செய்யும் சதிகளுக்கு புதின் மற்றும் கிம் ஜாங் உன்னுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, புதின் - கிம் ஜாங் உன் இருவரும் சுமார் இரண்டரை மணிநேரம் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு ரஷ யாவுக்கு வருமாறும் கிம் ஜாக் உன்னுக்கு புதின் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அணிவகுப்பு நிகழ்ச்சியில், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை.

எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்பதற்காக இரண்டு நாள்கள் சீனப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, இந்த அணிவகுப்பில் கலந்துகொள்ளாமல் நாடு திரும்பியது.

இரண்டாம் உலகப் போர் முடிந்து 80 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில், சீனாவின் தலைநகர் பீஜிங்கில் இன்று பிரம்மாண்ட ராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இந்த ராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சியில், சீனாவின் நட்பு நாடுகள் உள்பட சுமார் 26 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

நீண்ட காலத்திற்கு பிறகு வெளிநாட்டு பயணம் மேற்கொண்டுள்ள ரஷ ய அதிபர் புதின் மற்றும் வடகொரிய அதிபர் கிம் ஆகியோர் தியான்மென் சதுக்கத்திற்கு வருகை தந்து சீன ராணுவத்தின் அணிவகுப்பை பார்வையிட்டனர். அவர்கள் ஒற்றுமையாக பொதுவெளியில் தோன்றியதன் மூலம், அமெரிக்காவுக்கு எதிரான தங்கள் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளனர் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அதே போல் ஈரான் அதிபர் மசூத் பெசேஸ்கியன், பெலாரஷ யாவின் அதிபர் அலெக்ஸ ாண்டர் லுகாசென்கோ, கம்போடியா மன்னர் நரோதம் சிகாமணி, வியட்நாம் அதிபர் லுவாங் குவாங், மலேசிய பிரதமர் அன்வர் இப்ராகிம், மியான்மர் ராணுவ தலைவர் ஆங் ஹிலாங், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெ ரிப், கசகஸ்தான் அதிபர் காசிம் ஜோமார்ட், கியூபா அதிபர் மிகுவெல் டயாஸ் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

ஐரோப்பிய நாடுகளை பொறுத்தவரை செர்பியா அதிபர் மற்றும் ஸ்லொவாக்கியா பிரதமரை தவிர மற்ற தலைவர்கள் யாரும் பங்கேற்கவில்லை. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியாவின் தலைவர்களும் சீனாவின் ராணுவ அணிவகுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் தியான்ஜினில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு உலகின் கவனத்தை ஈர்த்தது.இதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி, ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் உள்ளிட்ட பல தலைவர்கள் பங்கேற்றனர்.குறிப்பாக, இந்தியப் பிரதமர் மோதி சீன அதிபர் ஷி ஜின்பிங்கை சந்தித்துப் பேசினார். இந்தியா 50 சதவிகித அமெரிக்க வரியை எதிர்கொள்ளும் நேரத்தில் இருவரின் சந்திப்பும் நடந்துள்ளது.கடந்த கால எல்லை மோதல்களைத் தவிர்த்து, இந்தியாவும் சீனாவும் தங்கள் உறவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியதாக தெரிகிறது.

பிரதமர் மோதியுடனான சந்திப்பில், உலகளாவிய சூழ்நிலை மாறி வருவதாகவும், உலக மக்கள்தொகையை அதிகம் கொண்டுள்ள இந்தியாவும், சீனாவும் குளோபல் சௌத்-இன் முக்கிய அங்கங்கள் என்றும் ஷி ஜின்பிங் பேசினார்.இரு நாடுகளும் நல்ல நண்பர்களாக இருப்பதும், ”ஒருவருக்கொருவர் வெற்றிக்குப் பங்களிக்கும் கூட்டாளிகளாக மாறுவதும் முக்கியம் என கூறிய சீன அதிபர், டிராகனும் யானையும் ஒன்றிணைய வேண்டும்” என்றார்.

பிரதமர் நரேந்திர மோதி, ”தனது உறவுகளை மேம்படுத்த இந்தியா உறுதியாக உள்ளது” என்று கூறினார்.அதேசமயம், எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்றபின் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் தியான்ஜின் பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார்.அதில், ”பாகிஸ்தான்-சீனா நட்பு அனைத்து சோதனைகளையும் கடந்தது. இது பரஸ்பர நம்பிக்கை, மரியாதை, உண்மையான அன்பை அடிப்படையாகக் கொண்டது” என அவர் கூறினார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோதியும் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரிஃபும் பல்வேறு நாட்டு தலைவர்களுடன் சீனாவின் தியான்ஜினில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.மோதி சீன அதிபர் ஷி ஜின்பிங் உடன் இருதரப்பு சந்திப்பை மேற்கொண்டார். அப்போது ஷ ாபாஸ் ஷெரிஃப், தியான்ஜின் பல்கலைக்கழகத்தில் பாகிஸ்தான் - சீனா உறவுகள் பற்றி நீண்ட உரையாற்றினார்.

உலகளாவிய சூழ்நிலை மாறி வருவதாக மோதியுடனான சந்திப்பின்போது ஷி ஜின்பிங் தெரிவித்தார்.சீனாவும் இந்தியாவும் பழமையான நாகரிகங்கள் மட்டுமல்ல, உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளாகவும் தெற்கு அரைக்கோளத்தில் முக்கிய அங்கமாகவும் உள்ளது எனத் தெரிவித்தார் ஜின்பிங்.

இருநாடுகளும் நல்ல நண்பர்களாக இருந்து ஒருவரின் வெற்றிக்கு இன்னொருவர் பங்களிக்கும் கூட்டாளிகளாகவும் இருக்க வேண்டும் என சீன அதிபர் கூறினார். யானையும் டிராகனும் ஒன்றாக வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சீனாவுடனான உறவுகளை மேம்படுத்த இந்தியா உறுதியுடன் இருப்பதாக பிரதமர் மோதி தெரிவித்துள்ளார். மேலும் அவர், “280 கோடி மக்களின் நலன்களும் இருநாடுகள் இடையேயான ஒத்துழைப்புடன் தொடர்புடையது” எனத் தெரிவித்தார்.

இந்தியா 50% அமெரிக்க வரியை எதிர்கொண்டுள்ளபோது இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

வல்லுநர்களின் கூற்றுப்படி, இந்த வரி இந்தியாவின் ஏற்றுமதி மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.தற்போது இந்தியாவும் சீனாவும் கடந்த கால எல்லை மோதல்களுக்கு மாறாக தங்களின் உறவுகளுக்கு புதிய வடிவம் கொடுப்பதில் கவனம் செலுத்தி வருகின்றன.

அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் வேலை செய்வது தான் பதற்றத்துக்கு காரணம், இதனால் வேலை வாய்ப்புகள் அமெரிக்காவை விட்டு வெளியே செல்கின்றன. இவை போக, பாகிஸ்தானுடனான போர்நிறுத்தத்திற்கு அமெரிக்காவுக்கு எந்த அங்கீகாரமும் இந்தியா கொடுக்கவில்லை. ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவது போன்ற பிரச்னைகளால் டிரம்ப் கோபத்தில் உள்ளார்” என்று கூறினார்.

இந்தியா இவை அனைத்தையும் ஒரு காட்சிக்காக செய்வதாக கூறும் ஜோஹர் சலிம் அதில் ஆழம் இல்லை என்கிறார். எனினும் இந்தியாவுக்கும் சீனாவுக்குமான வர்த்தக உறவுகள் மிகவும் ஆழமானவை என்றும் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே உத்தி சார்ந்த மோதல் நடைபெற்று வருகிறது, இது நீண்ட காலம் நீடிக்கும் என்றும் ஜோஹர் சலிம் தெரிவித்தார்.

”இந்தியா வல்லரசாகும் லட்சியத்துடன் உள்ளது. இந்தப் போட்டியில் சீனாவை தனது எதிரியாகவும் தடையாகவும் கருதுகிறது. இந்தியாவுக்கு சீனாவுடன் மூலாபாய கூட்டுக்கான எந்த வாய்ப்புகளும் இல்லை. இறுதியாக இந்தியா தனது இலக்குகளை அடைய மேற்கத்திய நாடுகளை நோக்கிய பழைய அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும்” என்கிறார் ஜோஹர் சலிம்.

பாகிஸ்தான் மற்றும் சீனாவின் நலன்கள் ஒன்றாக உள்ளதாகக் கூறுகிறார் ஜோஹர் சலிம்.

”இந்தியாவுக்கென கொள்கைகள் உள்ளன, சில நேரங்களில் அமெரிக்கா உடன் மிகவும் நெருக்கமாக செல்கிறது, சில நேரங்களில் விலகிச் செல்கிறது. இது பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுடனான உறவுகளையும் பதற்றமாக்கியுள்ளது” ன்பதே உண்மையாகும் .

மோதி கடந்த ஏழு வருடங்களாக சீனாவிற்குச் செல்லவில்லை எனக் கூறும் அவர் தற்போதைய சூழலில் சென்று வருவதால் அவரால் எந்த பெரிய மாற்றமும் கொண்டு வர முடியாது என்கிறார்.

பிராந்தியத்தில் நிலைத்தன்மையும் அமைதியும் வேண்டும் என சீனா விரும்புவதால் அந்நாட்டுடன் இந்தியா இணங்கிச் செல்வது பாகிஸ்தான் மீது நேர்மறையான தாக்கம் கொண்டிருக்கும் என்பதையும் பலர் ஒப்புக் கொள்கிறார்கள் .

இந்தியா தற்போது அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பு தொடர்பில் பல்வேறு சிக்கல்களை உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது இந்தியாவின் வர்த்தகத்தில் 143 பில்லியன் அமெரிக்க டாலர்களை இழக்க நேரிடும் என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் இருந்து அமெரிக்கா 90 பில்லியன் டாலர்கள் அளவுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்திய ஏற்றுமதியில் செல்போன்கள், மருந்து பொருட்கள், கம்யூட்டர் மற்றும் பலவகையான இயந்திரங்கள், கனிமங்கள், அலுமினியம் என்று ஏற்றுமதியில் மிகப் பெரிய சந்தையை அமெரிக்கா உடன் இந்தியா பகிர்ந்து கொள்ள முன்வந்த நிலையில் இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் 500 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு ஏற்றுமதி இறக்குமதி அதிகரிக்கும் வகையில் சென்று கொண்டு இருந்த நிலையில் தான் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவுடன் வரி விதிப்பு மூலம் மோதல் போக்கை கையாண்டு வரும் நிலையில் தற்போது இந்தியா மற்றும் சீனா ஆகிய மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார மண்டலங்கள் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்று கருதப்படுகிறது.


ஒரு வேளை இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகள் மத்தியில் உள்ள எல்லை பிரச்சினைகள் மற்றும் ராணுவ பலம் ஆகிய சில, பல முரண்பாடு நிலைத்து இருக்கும் நிலையில் சீன ராணுவம் உலகின் முதன்மையான ஒன்றாக தற்போது திகழ்கின்றது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்

இந்தியா மிகப் பெரிய அளவில் ஆன சந்தை மற்றும் ராணுவ உற்பத்தி கூடாரமாக தற்போது மாறி வரும் நிலையில் சீனா ரஷ்யாவுடனான கூட்டணியை பலப்படுத்தும் வகையில் இந்தியா செயல்பட்டு வருவதை அமெரிக்கா ஜிரணிக்க இயலாத நிலையில் தான் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்தியாவை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து வரும் நிலையில் சர்வதேச நாடுகள் மத்தியில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தேங்கிப் போன இந்திய பொருட்களுக்கு நிலையான சந்தையை தேட வேண்டிய அவலத்தில் இந்தியா தற்போது சர்வதேச நாடுகள் மத்தியில் பேசிக் கொண்டு இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதேநேரத்தில் ராணுவம் மற்றும் சர்வதேச பொருளாதார மையங்களாகவும் 288 கோடி மக்கள் வாழ்கின்ற இரண்டு மிகப் பெரிய அளவில் ஆன இரண்டு தேசங்களும் எடுக்கும் முடிவுகள் சர்வதேச அளவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா அமைந்துள்ள இந்த தெற்கு ஆசியா கூட்டணி அமெரிக்காவின் வர்த்தகம் பாதிப்பு மற்றும் ராணுவ செயல்பாடுகளுக்கு நல்ல செய்தி இல்லை என்பதே தற்போதைய நிலையாகும்.



# அன்பு ஜவஹர்ஷா பாராட்டு விழாவும், "முதுசொம் 75" புத்தக வெளியீடும்









*கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷாவுக்கான பாராட்டு விழாவும், அவரைப் பற்றிய கட்டுரைத் தொகுதி "முதுசொம் 75" புத்தக வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) அனுராதபுரம் சிடிசி கேட்போர் கூடத்தில் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தரும் இலங்கை அரபு எழுத்தணி கலைச் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவரும் பிரதமரின் மேலதிக செயலாளருமான ஏ. பி.எம். அஷ்ரப் தலைமையில் இடம்பெற்றது. மண்டபம் நிரம்பி வழிந்த இந்நிகழ்வில் வரவேற்புரையை நாச்சியாதீவு பர்வீன் நிகழ்த்தினார்.*

*விழாவின் நோக்க உரையை நிர்வாக உத்தியோகத்தர் வட மத்திய மாகாணத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான பணிப்பாளர் ஜே. ரழியுதீன் நிகழ்த்த தலைமை உரையை ஏ.பி.எம். அஷ்ரப் நிகழ்த்தினார். சிறப்புரைகள் சிரேஷ்ட உதவி கணக்காளர் நாயகம் மாஹிர் அசனார், திக்குவல்லை கமால், மூதூர் மொஹிதீன் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டன. ஏற்புரையை அன்பு ஜவஹர்ஷாவும் நன்றி உரையை கெக்கிராவ ஸூலைஹாவும் நிகழ்த்தினார்கள். நிகழ்வின் இடையில் சிறப்பம்சமாக கலாநிதி எம்.சி ரஸ்மின் தயாரித்த ஜவஹர்ஷா தொடர்பிலான ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டது.*

*நிகழ்வு தொய்வடையாமல் சிரேஷ்ட ஒளி ஒலிபரப்பாளர் அஹமட்.எம்.நசீர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.*




"அண்ணலாரின் 1500 ஆவது மீலாத் தினத்தை அழகிய முறையில் அலங்கரிப்போம்" என்ற தொனிப்பொருளில் காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத்தலைவர் சங்கைக்குரிய சேகுநாயம் அல்–ஆலிமுல் பாழில் அஷ் ஷெய்ஹுல் காமில் அஷ் சேஹு அஹ்மத் இப்னு முஹம்மத் நாயகம் அன்னவர்களின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக மள்வானையில் (04) மீலாத் நடைபவனி இடம் பெற்றது.பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந்த மீலாத் ஸலவாத் நடைபவனி நேற்று வியாழக்கிழமை காலை 10.45 மணிக்கு அல் முபாரக் தேசிய பாடசாலை மைதான வளாகத்திலிருந்து ஆரம்பித்து தல்கல முபாரக் மௌலானா தக்கியா ஷெய்ஹ் முஸ்தபா ஜும்ஆ பள்ளிவாசல் வரை நடைபவனியாக இடம் பெற்றது.

## வாசிப்பிரியா! 32



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பும் சமூக வாழ்வும்

வாசிப்புக்கும் சமூக வாழ்வுக்கும் நெருங்கிய நேரடி தொடர்புகள் காணப்படுகின்றன. சமூகத்தில் ஒருவன் வாசிக்கின்றான் என்பதன் அர்த்தம் சமூகத்தில் ஒருவித மாற்றத்தை அவன் உருவாக்க தயாராகின்றான் என்பதுதான். சமூகம் வேண்டி நிற்கின்ற மாற்றத்தை அவன் தன்னுடைய வாசிப்பின் மூலமாக நிகழ்த்திக் காட்ட வேண்டும். இதற்கு அவன் வாழுகின்ற சமூகமும் பொறுப்பாளர்களும் உதவி ஒத்தாசை புரியவும் வேண்டும் வழி காட்டவும் வேண்டும் ஊக்குவிக்கவும் வேண்டும் இல்லாது பட்சத்தில் இந்த எதிர்பார்ப்பு ஒருபோதும் சாத்தியப்படாது

இதற்கு மாற்றமாக சமூகத்தின் அழிவு நடவடிக்கைகளுக்காக அல்லது சமூகத்தின் பின்னடைவுக்காக அவனுடைய செயற்பாடுகள் காரணமாக இருக்கும் பட்சத்தில் அவனுடைய வாசிப்பால் எந்த விதமான பயனும் அவனுக்கும் அவனை சுற்றி இருக்கின்றவர்களும் இந்த உலகத்திற்கும் ஏற்படாது.

ஒரு மனிதன் வாசிக்கின்றான் என்றால் அவனுடைய வாழ்க்கையிலே மாற்றம் நிகழ வேண்டும் அவனைப் பார்த்து ஏனையவர்கள் அவனை முன்மாதிரியாக கொண்டு வாழ்கின்ற அளவுக்கு அவன் தன்னுடைய தனிப்பட்ட சமூக குடும்ப தொழில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அவனுடைய வாழ்க்கை என் இவர்களையும் வாசிக்க தூண்ட வேண்டும் அந்த அளவு அவனிலே ஆரோக்கியமான உயர்ந்த மாற்றங்கள் வரவேண்டும் நல்ல விழுமியங்களைப் பின்பற்றக் கூடியவனாக அவன் மாற வேண்டும்.

புத்தக வாசிப்பு என்பது வெறுமனே தகவல்களை மூளையில் திணிப்பதல்ல தன்னுடைய பிழையான மோசமான துற்குணங்களை பழக்கவழக்கங்களை நடத்தைகளை அது மாற்ற வேண்டும் அவனுடைய வாழ்க்கையை சீரான பாதை நோக்கி வழிபடுத்த வேண்டும் சமூகம் பற்றிய நல்லெண்ணத்தை அவனிலே உருவாக்க வேண்டும். சமூகத்திற்காக தானும் பணியாற்ற வேண்டும் பங்களிக்க வேண்டும் என்று ஆசையை ஆர்வத்தை அவனுள் எழச்செய்ய வேண்டும்

அவனுடைய வாசிப்பு வாழ்க்கை அவனளவில் மாத்திரம் மாற்றம் தரக்கூடிய விடயமாக இருக்கக் கூடாது அது சுயநலம் வாய்ந்ததாக இருக்கும் ஏனென்றால் எழுதப்பட்ட நூல்கள் கூட எழுதப்பட்டவருக்காக மட்டும் எழுதப்படவில்லை அது அவரல்லாத ஏனையோரின் நலனுக்காகவும் எழுதப்பட்டிருக்கின்றது அதனால் தான் ஏனையோர் அந்த புத்தகத்தை வாசிக்கின்றனர் புத்தகத்தை வாசிக்கின்றவர்கள் கூட அந்த புத்தகத்தின் பயன் பெறவேண்டும். பரவலாக்கம் செய்ய வேண்டிய பொறுப்பை தாமாக சுமந்து கொள்கின்றனர். இது ஒரு வகையில் மனித வாழ்வின் சுபீட்சத்துக்கும் வெற்றிக்கும் வழி அமைப்பது கருத்துக்கள் சிந்தனைகள் பரவலடைவதற்கும் காரணமாக அமைகின்றது

சாதாரண இரண்டு நபர்கள் ஒன்றிணைவதை விடவும்

இரண்டு புத்தகவிரும்பிகள் அல்லது இரண்டு வாசகர்கள் ஒன்றினைகின்ற பொழுது அங்கு கருத்துக்களும் சிந்தனைகளும் பேசப்படும் அலசப்படும் கலந்துரையாடப்படும் விமர்சிக்கப்படும் மூன்றாவது நபரை நோக்கி அது எடுத்துச் செல்லப்படும். அல்லது இன்னொரு கருத்து சிந்தனை அங்கிருந்து உருவாவதற்கு வழி அமைக்கும். எல்லா வகையில் நோக்கினாலும் வாசிப்பு வாழ்வை மட்டும் அல்ல சமூக வாழ்வையும் பலப்படுத்திவிடும் வழிகாட்டி விடும் ஆற்றல் பெற்றோன்றாகத்தான் அமைகிறது.

ஒரு மனிதன் வாசிக்கின்ற பொழுதே அவன் பக்குவப்பட்டவனாக பணிவானவனாக இருக்க வேண்டும் அவனைப் பார்த்து ஏனையவர்களும் பாடம் படிப்பினை பெறக் கூடியதாக இருக்க வேண்டும் அவன் வாசிக்கின்ற அதே நேரத்தில் அவனிடத்திலே அகங்காரம் கர்வம் செருக்கு தான் தோன்றித்தனம் போன்றன காணப்படுமாக இருந்தால் அல்லது அவன் அவ்வளவு அதிகமாக வாசித்தும் அவனிடத்திலே போற்றத்தக்க புகழத் தக்க பின்பற்றத்தக்க அறவொழுக்கங்கள் இல்லை என்றால் அவனை சமூகம் கண்டு கொள்ள மாட்டாது. தூக்கி வீசுவார்கள் கிடப்பில் போடுவார்கள் அவனை முன்மாதிரியாக கொள்வதற்கு யாரும் வர மாட்டார்கள்

அதேபோலத்தான் வாசிக்கின்ற பொழுது அவனிடத்திலே சமூகம் பற்றிய ஒரு விதமான நல்லெண்ணம் உருவாக வேண்டும் தான் இருக்கின்ற இடத்தில் இருந்து கொண்டு தனக்கு கீழால் இருக்கின்றவர்களை அவன் மரியாதையாக நோக்க வேண்டும் பார்க்க வேண்டும் நடத்த வேண்டும் அதுபோல தன்னைப் போலவே கல்வி புலத்தில் அறிவேன் சிந்தனையில் மேம்பட்டவர்களை புத்திஜீவிகளை அவன் தான் தோன்றித்தனமாக தன்னுடைய குறைந்தபட்ச அறிவைக் கொண்டு விமர்சிக்கவோ விதண்டாவாத நோக்கில் சண்டை கிழுக்கவோ முற்படக் கூடாது வாசிப்பு ஒரு வாசகனை வளமுள்ளவனாக ஆக்கி வைக்க எப்பொழுதும் முயல்கிறது என்பதனை ஒவ்வொரு வாசகனும் உணர்ந்து கொண்டால் வாசிக்கின்ற சமூகத்தில் சமூகமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

## மனநலமும் ஆலோசனையும்

84

# மற்றவர் வெற்றியில் மகிழ்ச்சி

மற்றவர்களின் வெற்றியில் மகிழ்ச்சி கொண்டாடுவதில் நீங்கள் விருப்பம் காட்டும் ஒருவரா? மற்றவர் முன்னேற்றத்தில் சந்தோசம் அடைந்து இறைவனை புகழ்வதில் ஆர்வம் காட்டும் ஒருவரா?

அப்படியானால் உங்கள் உணர்ச்சி முதிர்ச்சியடைந்தாக இருக்கிறது, உங்கள் உள்ளம் சகோதர உணர்வால் ஊக்கம் பெற்றிருக்கிறது என்பது தான் இதன் கருத்தாகும். அதுதான் உண்மையாகும். நம்முடைய சொந்த நலன்களை ஒதுக்கிவிட்டு, வேறொருவருக்காக உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது ஒரு உயர்வான மனிதக் குணமாகும். அந்த குணம் உங்களிடம் இருந்தால் நீங்கள் இந்த மண்ணில் வாழ்கின்ற சிறந்தவர்களில் ஒருவராவீர்.

இருப்பினும், ஆழ்ந்த சுயநலவாதிகள் பெரும்பாலும் மற்றவர் வெற்றியில் விருப்பம் காட்டவே மாட்டார்கள். அவர்கள் மற்றவர்களின் சாதனைகளை, அடைவுகளை குறைத்து மதிப்பிடுவார்கள். அவற்றிலிருந்து கவனத்தைத் திருப்பிக் கொள்வார்கள். அல்லது மற்றவர்களின் வெற்றியை கண்டு ஒருவித மன அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள்.

இந்த நடத்தை ஒரு பற்றாக்குறை மனநிலையிலிருந்து உருவாகிறது. இந்த இடத்தில் இவர்கள்

வேறொருவரின் ஆதாயத்தை தங்கள் இழப்பாக உணர்கிறார்கள்.

வேறொருவரின் ஆறுதலை தங்களுக்கு பாரமாக நினைக்கின்றார்கள்.

மற்றவர்களின் வெற்றியை தனித்துவமாக பார்க்க விரும்பாதவர்களாக தம்மை ஆக்கிக்கொள்கிறார்கள்.

மற்றவர்களின் வெற்றிகளைக் கொண்டாடத் தவறிய ஒருவரை நீங்கள் கவனித்தால் அல்லது

அவர்களின் வெற்றிகளை மறைக்க முயற்சிப்பவரை கண்டால் அல்லது

மற்றவர் விருத்தியில் பொறாமைப்படக் கூடியவரை கண்டால்.. அது ஆழ்ந்த சுயநலத்தின் அடையாளமாக இருக்கலாம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எம் ஒவ்வொருவரின் பயணமும் தனித்தன்மை வாய்ந்தது, அது அவரவருக்கு சொந்தமானது. ஒவ்வொருவரிடமும் தனித்துவமான ஆற்றல்கள், திறன்கள் இருக்கத்தான் செய்யும்.

எல்லோருக்கும் ஒரேவிதமான ஆற்றல்கள் இருந்ததால் இந்த உலகம் ஒருபோதும் சரியாக இயங்காது. ஒவ்வொரு மனிதனின் தனித்துவமான திறன்களும் ஆற்றல்களும் வளமான சமூகத்தை உருவாக்க கட்டாயம் தேவை என்பதை நாம் உணர வேண்டும்.

அப்போது தான் பலதரப்பட்ட ஆற்றல்களால் செழிப்புற்ற மனிதர்கள் வாழும் சமூகத்தை கட்டியெழுப்ப கைகொடுக்கலாம்.

மற்றவர் வெற்றியில் இன்பம் காணும் இதயமுள்ள மனிதர்களாக நாங்கள் இருப்பதுடன் எமது பிள்ளைகளும் அப்படி இருக்க பயிற்றுவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# அல் அஸ்லாபின் முன்னோர் நினைவு நிகழ்வு
































**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

அல் அஸ்லாப் முன்னோர் நினைவு மன்றம் 2வது தடவையாக முப்பெரும் நினைவுப் பேருரைகள் நிகழ்வு ஒன்றினை நேற்று முன்தினம் (2) செவ்வாய்க்கிழமை தபால் திணைக்கள தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டிற்கும் முஸ்லிம்களுக்கும் அரும் பணியாற்றி மறைந்த முன்னோர்களான சேர் ராசீக் பரீட்ட, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எஸ்.இஸ்மாயில் மற்றும் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோருக்கான நினைவுப் பேருரை நிகழ்வு அல் அஸ்லாப் முன்னோர் நினைவு மன்றத் தலைவர் எம்.எச்.எம். நியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வரவேற்புரையை மன்றத்தின் தலைவர் எம்.எச்.எம். நியாஸ் வழங்கினார் தொகுப்புரையை மன்றத்தின் தேசிய அமைப்பாளர் எம்.இஸட்.ஏ. முனவ்வர் வழங்கினார் அதனைத் தொடர்ந்து மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர் நடமாடும் ஆவணக் காப்பகமாகும் எனும் தலைப்பில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் எம்.என். அமீன் உரையாற்றினார், முதல் முஸ்லிம் சபாநாயகர் எச்.எஸ்.இஸ்மாயில் எனும் தலைப்பில் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் வழங்கினார், இலங்கை சோனக சமூகத்தின் முடிசூடா மன்னன் சேர் ராஸிக் பரீத் எனும் தலைப்பில் ஜாமியா நளீமியாவின் முதல்வர் அஸ்ஸெய்க் எஸ். எச்.எம்.பளீல் வழங்கினார்.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புள்ளா கலந்து கொண்டு உரையாற்றினார் கௌரவ அதிதியாக முன்னாள் கொழும்பு மாநகர சபையின் மேயர் ஒமர் காமில் மற்றும் விசேட அதிதியாக சீனத் ரேடிங் தனியார் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எச்.எம்.மாஹிரும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது கல்ஹின்னை பஹ்மி ஹலீம்தீனின் மறைந்த முன்னோர்கள் தொடர்பான கவிதைக் கானொலியும் கான்பிக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் பல கல்விமான்கள், புத்திஜீவிகள் அரச, தனியார் துறை ஊழியர்கள், மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் மூன்று முன்னோர்கள் தொடர்பான கையேட்டின் முதற் பிரதியை முஸ்லிம் ஸலாகுதீன் பெற்றுக் கொண்டார். அத்துடன் அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.






நாச்சியாதீவு பர்வீன்

# எஸ்.பாயிஸாஅலியின் கடல்முற்றம் ஒரு பார்வை!

**மூதூர் முகைதீன்**

அண்மைக் காலங்களில் ஈழத்து இலக்கியப்புலத்தில் கவிதைநூல்களின் வரவு கணிசமாக அதிகரித்துக் காணப்படுகின்றன.இந்த வகையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஒரு காத்திரமான கவிதைநூலினை கடல்முற்றம் மூலம் எம் கவிதைப்பசிக்கு நல்ல தீனியாக சமைத்துத் தந்துள்ளார் கவிதாயினி எஸ்.பாயிஸாஅலி அவர்கள்.

தனது இலக்கியப் பயணத்தில் எவ்வித ஆரவாரமோ,விளம்பரமோ இன்றி இதுவரை பல நூல்களை வெளியிட்டு இவர் தன் கவியாற்றலைப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.கிழக்கிலங்கையில் வாழும் சிறந்த கவிதை ஆளுமைகளில் முன்னிலைப் படுத்தக் கூடியவர்களில் இவரும் ஒருவர்.ஆனாலும் தன்னைப் பற்றிய அறிமுகத்தை அதிகம் விரும்பாத அமைதியான சுபாவமும் தன்னடக்கமுமிக்க ஒரு கவிஞர்.

இவரின் நான்காவது பிரசவமான கடல்முற்றம் தென்னிந்தியாவில் மோக்லி பதிப்பகம் மூலம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. பொருத்தமான அட்டைப்படம்,நேர்த்தியான வடிவமைப்பு,அழகியபதிப்பு என்பன நூலின் கனதியை இன்னும் மெருகூட்டச் செய்கின்றன.

ஐம்பது கவிதைகளை உள்ளடக்கிய கடல்முற்றத்தை வாசிக்கும்போதே எம்மை அறியாமலேயே அவரின் வீட்டு முற்றத்திற்கு நம்மை அழைத்துச்செல்கின்ற உணர்வை அக்கவிதைகள் ஏற்படுத்துகின்றன.

தான் வாழும் சூழலையும்,வாழ்வியல் அனுபவங்களையும்,சந்தித்த வித்தியாசமான மனிதர்களையும் பகைப்புலனாகக் கொண்டே அதிகமான கவிதைகளை இவர் உள்ளடக்கியுள்ளார்.

உண்மையில் அவர் வசிக்கும் இல்லம்கூட கொட்டியாரக் குடாவின் அழகிய கடலோரச் சூழலில் அமைந்துள்ளதை நானறிவேன்.இதன் காரணமாகவோ என்னவோ தன் வீட்டுச் சாரளத்தினூடே தான் நித்தமும் தரிசிக்கும் கடல்முற்றத்தை இதற்கு மகுடமாகச் சூட்டியுள்ளார் போலும்.

ஈழத்தின் பிரபல இலக்கியவாதியான கவிதாயினி அனார் யுயெச ஐளளயவா சுநாயயெ அவர்களின் ஆழமான முன்னுரையில் இக்கவிதைகளின் உள்ளடக்கம் பற்றியும், ஆசிரியரின் கவியாற்றல் பற்றியும் மிகச் சிறப்பாக நயந்து குறிப்பிட்டுள்ளமை நூலின் பெருமைக்குச் சான்றாக உள்ளன.

எஸ்.பாயிஸாஅலி அவர்கள் இதில் உள்ள ஒவ்வொரு கவிதையையும் சொற்களைக் கொண்டு செதுக்கிய ஒரு அழகிய சிற்பமாகவே படைத்துள்ளார். நவீன கவிதைகளின் வரவில் இவர் வசப்பட்டபோதும் புரியாத சொற்பிரயோகங்களைப் படிப்பவர்களின் உள்ளத்தில் திணித்து அவர்களைச் சங்கடத்திற்குள்ளாக்கும் அதீத வித்துவத்தனத்தைக் காட்டாமல் சாதாரண வாசகனுக்கும் புரியும் , வகையில் எளிய வடிவத்தில் யதார்த்த பூர்வமான நிகழ்வுகளைக் கவித்துவம் குன்றாது நல்ல சொல்நடையில் கூறியிருக்கும் பாங்கு பெரிதும் மெச்சத்தக்கது.

கவிதைகளை வெறுமனே வெறும் சொல்லாடல்களை மட்டுமே கொண்டு சோடிக்காமல் வார்த்தைகளை இடத்திற்குப் பொருத்தமான வகையில் கையாளும் திறன் இவருக்குக் கைவந்த கலையாக உள்ளதை இக்கவிதைகளில் காணமுடிகிறது.

கடல்முற்றம் சமூகப்பிரச்சனைகளையும்,மனித உணர்வுகள்,இயற்கை,மனித உறவுகள்,விழுமியப் பண்பு போன்ற விடயங்களைப் பல கோணங்களில் கவிநயத்தோடு பேசுகின்றது.நவீன கவிதைகளுக்கே உரித்தான ,படிமம்,குறியீடுகள்,சகல கவிதைகளிலும் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளமை மூலம் இவரின் கவித்துவ ஆற்றலை நன்கு அறியமுடிகின்றது.அத்தோடு கவிதையின் கருப்பொருளுக்கு ஏற்ப புதிய சொற்களைப பயன்படுத்தும் வகையில் வார்த்தைகள் இவருக்கு நன்கு வசப்படுகின்றன.இதற்கு இவரின் கல்விப்புலமும் ஒரு காரணமாக அமைந்திருக்கக்கூடும்.




தொழில் ரீதியாக ஒரு விஞ்ஞான ஆசிரியரான இவரின் தமிழ் இலக்கியத்தில் கலைமாணி, இதழியல்மக்கள் தொடர்பியலில் முதுமாணி ,உளவியல்டிப்ளோமா என நீண்டு செல்லும் கல்வித்தகைமைகள்,எதிர்காலத்தில் பல சாதனைகளை இலக்கியத்துறையில் நிலைநாட்டுவதற்கு நிச்சயம் கைகொடுக்கும் என நம்பலாம்.

கடல் முற்றத்தில் உள்ள ஒவ்வொரு கவிதையிலும் கவிஞர் தான் முன்வைக்கும் கருத்தை எவ்வித செயற்கைத்தன்மையும்ம் இன்றி சரியான சொற்பிரயோகங்களுடன் உணர்வூட்டும் வகையில் அமைத்திருக்கும் விதம் இவரின் கவியாற்றலுக்கு எடுத்துக் காட்டாக உள்ளன.

ஒரு சிறுசெய்தியைக்கூடத் தன் கற்பனை வளத்தால் உருவகமாக்கிப் பொருத்தமான குறியீடுகளுடன் நயமிக்க கவிதையாக வடிவமைக்கும் ஆசிரியரது வல்லமையை அநேக இடங்களில் காணக் கூடியதாக உள்ளது.

இவற்றிக்கு எடுத்துக்காட்டாக “விடியல்” என்ற கவிதையில்

பேயுலவும் கரிய இரவாய்
இருண்டு கிடக்கிறது மாகடல்.

எனவும்

“வெளுக்கும் கிழக்கு” என்ற தலைப்பில்

ஃஃமதுக்குவளைகளேந்திய
நீளக் கண்ணழகியரின்
பட்டாடைகளுக்கென
பிரத்தியேகமாய்
வளர்க்கப்படும்
சுவனத்துப்
பட்டுப்புழுதான்
சுரந்திருக்க வேணுமதன்
சொர்ண யிழைகளை

என்றும்

பெண்கள் மீதான வன்முறைகளையும் அடிமைத்தனத்தையும் சாடும் வகையில் எழுதப்பட்ட ”பாக்கியவதிகள்” என்ற கவிதையில்

ஃஃதிரிக்கவும்
உரிக்கவும் மட்டுமே
விழைகிற
கூர் நகங்களிடையேயான
தொடர் பயனங்களுக்குள்
எப்படித் திறப்பேன் முகத்திரை?

போன்ற சிறப்பான,கருத்தாழமிக்க, அர்த்தமுள்ள,அழகியலுடன் கூடிய வார்த்தைகளால் நெய்த கவிவரிகளைப் பதச்சோறாகக் குறிப்பிடலாம்.

அத்தோடு இந்நூலில் ஆசிரியர் தனது குடும்ப உறுப்பினர்கள் மீதான ஆத்மார்த்த பாசத்தையும்,உறவையும் மூன்று தலைப்புகளில் உணர்வுபூர்வமாகக் கவிநயத்துடன் மிக அற்புதமாகச் சித்தரித்துத் தன் உணர்வுகளை வெளிப்படுத்திய விதமும் வியந்துரைக்கத் தக்கது.

இவர் விஞ்ஞான ஆசிரியராக இருப்பதனால் அவரின் பாடம் தொடர்பான சொற்பிரயோகங்கள் பல கவிதைகளில் விரவி இருந்தாலும் அவை யாவும் கவிப்பொருளுக்கு எந்த வகையிலும் குந்தகத்தை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும்.

மேலும் இவர் ஒரு ஆசிரியர் என்ற வகையில் தனது வகிபாகத்தையும் ஒரு கவிதையில் மிக அழகாக சித்தரித்துள்ளமை இரசனைக்குரிய வகையில் உள்ளது.பாடசாலை அதிபர்களின் நிர்வாகமுறையில் ஆசிரியர்கள் படும் சங்கடத்தைக்

”கடல் கிழித்து விரையும்
இயந்திரப்படகு”

என்ற கவிதையில் ...

அதிபாரமிக்க
என் அதிகாரியே
உன்
முறைத்த பார்வையும்
விறைத்த சிவப்புக்கீறலும்
தினமும் நீயென்
இதயந்துளைக்கும்
இரட்டைக்குழல் சுடுகலனோ.....?

என மனிதாபிமானமின்றி நிர்வாகம் புரியும் அதிகாரிகள் மீதான தன தார்மீகக் கோபத்தை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு இவர் கற்பிக்கும் பாடம் தொடர்பான சொற்பிரயோகங்கள் பல கவிதைகளில் விரவி இருந்தாலும் அவை யாவும் கவிப்பொருளுக்கு எந்த வகையிலும் குந்தகத்தை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும்.

கடல் முற்றத்தின் ஐம்பது கவிதைகளுமே ஒட்டுமொத்தமாக சமூகம்,சூழல்,மானிடம்,பண்பாடு சார்ந்த கோணங்களில் கவித்துவத்தோடு சிருஷ்டிக்கப்பட்ட கடல்முத்துக்கள் என்றால் மிகையாகாது.

மேலும் இவரின் எதிர்கால இலக்கியப்பயணத்தில் இன,மத,மொழி,தேசியம் கடந்ததாகத் தன் பார்வையை இன்னும் விசாலமாக்கி முற்போக்குச் சிந்தனையுடன் கூடிய கவிதைகளையும் படைக்க முன்வர வேண்டும் என்பது ஒரு வாசகன் என்ற வகையில் எனது ஆதங்கமாகும்.

சமகாலக் கவிதைத் தளத்தில் பல பரிணாமங்களுடன் நின்று சிறப்பான கவிதைகளைப படைத்து வரும் படைப்பாற்றல் மிக்க கவிதாயினி எஸ்.பாயிஸாஅலி அவர்களிடமிருந்து தொடர்ந்தும் இன்னும் பல ஆக்கங்களை இலக்கிய உலகு ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

---




பயாஸா பாஸில்

# நேரத்தை நிர்வகிப்பதில் பெண்கள்



நேரம் என்பது வாழ்வின் மிக முக்கியமான வளமாகும். அந்த நேரத்தை சிறப்பாக நிர்வகிக்கக்கூடிய திறமை பெரும்பாலான பெண்களில் இயற்கையாகவே உள்ளது. குடும்பம், வேலை, சமூக சேவைகள், குழந்தைகளின் பராமரிப்பு என பல பொறுப்புகளை ஏற்று நடாத்தும் பெண்கள், நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்துவதில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள்.

இன்றைய சமகால பெண்கள் வேலைக்கு செல்வதோடு மட்டுமல்லாமல், வீட்டு வேலைகளையும் சமநிலைப்படுத்தி செய்கிறார்கள். கால அட்டவணை, முன்னேற்பாடு, முன்னுரிமை கொடுப்பது போன்ற பழக்கங்களை வைத்துக்கொண்டு அவர்கள் ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளவையாக மாற்றுகின்றனர்.

மேலும், தொழில்நுட்பத்தின் உதவியுடன், பெண்கள் தங்கள் தினசரி பணிகளை விரைவாகவும் எளிதாகவும் முடிக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை நிறைவேற்றும் நேரத்தையும் உருவாக்கிக்கொள்கிறார்கள்.

நேரம் என்பது யாருக்கும் காத்திருக்காது. ஆனால் அதை சரியாக நிர்வகிக்கக்கூடியவர்கள் மட்டுமே வெற்றியடைகிறார்கள். பெண்கள் அந்த திறமையை தங்களால் நிரூபித்துள்ளனர். அவர்களின் நேர மேலாண்மை கற்றுக்கொள்ளதக்க ஒன்று என்பதை நாம் உணர வேண்டும்.

பெண்கள் நேரத்தை நிர்வகிப்பதில் காணும் அனுபவம், நுண்ணறிவு மற்றும் திறமை, சமுதாய வளர்ச்சிக்கே வழிகாட்டுகிறது. அவர்களை ஊக்குவித்து மேலும் திறமையாக வளர்த்திட நாம் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும்.

# உயர் பதவிகளை அலங்கரித்த போதிலும் எளிமையைக் கைவிடாத தலைவர் பாக்கீர் மாக்கார்



டாக்டர் ரயீஸ் முஸ்தபா
பிரபல குழந்தை வைத்திய நிபுணர், ஐக்கிய இராச்சிய இஸ்லாமிய அறக்கட்டளை தலைவர்

இன்று நாங்கள் எமது நாட்டின் பெருமைக்குரிய ஒரு மகனை நினைவு கூருகிறோம். எம் மண்ணின் மைந்தனை நாம் நினைவு கூருவது இவர் எமது பாராளுமன்றின் முன்னாள் சபாநாயகர் என்பதற்காக மட்டுமல்ல, தேசமான்ய விருது பெற்ற ஒரு சாதனையாளர் என்பதற்காக மட்டுமல்ல, ஒரு கெபினட் அமைச்சராக, ஆளுநராக எமது தாய் நாட்டுக்கு சேவை செய்தார் என்பதற்காக மட்டுமல்ல, இவர் வாழ்ந்த வாழ்க்கை, இவர் பயணம் செய்த பாதை, செய்த நற்பணிகள், விட்டுச் சென்ற மரபுகள் இவையனைத்தும் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒளி விளக்காக ஒரு தீபத்தை விட்டுச் சென்றிருக்கின்ற மனிதாபிமானம் கொண்ட ஒரு சிறந்த மனிதர் என்ற காரணத்திற்காகவே ஆகும்.

ஒரு சிறந்த குடும்பப் பின்னணியோடு பேருவளையில் பிறந்து, வளர்ந்து சாஹிரா கல்லூரியில் கல்வி கற்ற அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் மாணவப் பருவத்திலிலேயே தலைமைத்துவ பண்புகள் கொண்டவராக இருந்திருக்கின்றார். முஸ்லிம் மஜ்லிஸ், தமிழ் இலக்கிய மன்றம், ஆங்கில இலக்கிய மன்றம் ஆகியவற்றின் தலைவராக இருந்து மூன்று மொழிகளிலும் பேச்சாற்றல் பெற்று தலைமைத்துவம், இலக்கியம் மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் அவரது தூர நோக்கு சிந்தனை மாணவப் பருவத்திலேயே வெளிக்காட்டப்பட்டதை வரலாற்றில் இருந்து எங்களுக்கு படிக்க முடியுமாக இருக்கின்றது.

இளமைப்பருவத்தில் சட்டத்துறை அறிஞராக தன்னை அர்ப்பணித்து களுத்துறை வழக்கறிஞர்கள் சங்கத்துடன் சேர்ந்து நீதிக்காக போராடிய இந்த மாமனிதர் ஏழைகளுக்கு இலவசமாக வழக்குகளை முன்னின்று வாதிட்டதும் வழக்கறிஞர் பாக்கீர் மாக்கார் அவர்களின் மற்றையப் பக்கமாக இருக்கின்றது.

அவரது முழு அரசியல் வாழ்க்கையும் ஒற்றுமைக்காக ஓங்கி ஒலித்த குரல் என்பதும் நீதி நியாயத்திற்காக நிமிர்ந்து நின்ற ஒரு மனிதாபிமானம் கொண்ட ஒரு அரசியல்வாதி என்பதும் தெட்டத்தெளிவான உண்மை.

அது மாத்திரமல்லாமல் மறைந்த தலைவர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் 1977ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் 10வீதத்துக்கும் குறைந்த அளவு முஸ்லிம்கள் வாழ்கின்ற பேருவளை தேர்தல் தொகுதியில் 27000 வாக்குகள் பெற்று பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார் என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒரு குறிப்பிடத்தக்க மிகச்சிறந்த அடைவாகும். இந்த அடைவு எவருக்கும் சாதாரணமாக கிடைக்கமாட்டாது. இந்த பிரபல்யமும் அங்கீகாரமும் அவருக்கு கிடைத்ததல்ல. அவர் சம்பாதித்தது. அவர் பெற்றுக்கொண்டது. பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டிலே வித்தியாசமான மொழி பேசுகின்ற வித்தியாசமான மதங்களை அனுசரிக்கின்ற வித்தியாசமான கலாசாரப் பண்புகள் கொண்ட ஒரு சமூகத்திலே தான் ஒரு முஸ்லிமாக ஈமானிய உணர்வுடன் வாழுகின்ற அதேநேரம் மற்றைய சமூகங்களை ஆதரித்து அரவணைத்து அன்புபோடும் பண்போடும் வாழ வேண்டும் என்பதையும் அவ்வாறு வாழ முடியும் என்ற அந்த பெரும் பாடத்தை தத்துவமாக ஒரு கோட்பாடாக பேசிவிட்டுச் செல்லாமல் அவர் வாழ்ந்து காட்டியிருக்கின்றார் என்பதற்கு அவரது அடைவுகள் அடையாளமாக இருக்கின்றன.

1978 ஆம் ஆண்டில் பாராளுமன்ற சபாநாயகராக பதவி ஏற்ற அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் பழைய பாராளுமன்ற கட்டிடத்தின் கடைசி சபாநாயகராகவும் மற்றும் புதிய பாராளுமன்ற கட்டிடத்தில் முதல் சபாநாயகராகவும் கடமையாற்றினார் என்பது அவரது கிரீடத்தில் முத்துக்களாக மின்னுகின்ற பல வரலாற்றுப் பெருமைகளில் ஒன்றாக இருக்கின்றது.

பாராளுமன்றத்திற்குள் அவரது தலைமைத்துவ பணியும் பாராளுமன்றத்திற்கு வெளியே அவரது சமூக அரசியல் அர்ப்பணங்களும் எண்ணிடலங்காதவை. அவரது மரணத்துக்குப் பின்னால் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்காருக்கான நினைவேந்தல் உரைகளை ஹன்சாட் ஏடுகளில் படிக்கின்ற போது இந்த தலைவர் பாராளுமன்றத்திற்குள் எல்லா அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களதும் எல்லா மதங்களையும் இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் என்று அனைவரினதும் மதிப்பையும் மரியாதையும் முழுமையாக பெற்றிருக்கின்றார் என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

1981 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களும் பிரதம மந்திரியாக இருந்த ரணசிங்க பிரேமதாச அவர்களும் அந்த ஆண்டில் நடைபெற்ற இளவரசர் சார்ள்ஸ் அவர்களுக்கும் லேடி டயானா அவர்களுக்கும் இடையே நடைந்த ரோயல் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்ற போது சபாநாயகராக இருந்த அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் அவர்கள் பதில் ஜனாதிபதியாக சில நாட்கள் நமது நாட்டுக்கு சேவை செய்திருக்கின்றார். அவரது மனிதாபிமானம், அர்ப்பணம், தியாகம் இவையெல்லாம் அவரை எமது நாட்டுக்கு ஒரு சில நாட்களுக்காவது ஜனாதிபதியாக சேவை செய்ய கூடிய வாய்ப்பை பெற்றுக் கொடுத்தது என்பது அவரது வாழ்க்கை வரலாற்றில் மறக்க முடியாத நாங்கள் ஞாபகப்படுத்த வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

மேலும் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் பற்றி முன்னைய நாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அவர்கள் பாராளுமன்றத்தில் பேசுகின்ற போது பலருக்கும் பொதுவாக தெரிந்திருக்காத ஒரு செய்தியை சொன்னார். அதுதான் 2ஆம் உலக மகா யுத்த காலத்திலே இளமைத் துடிப்பும் நாட்டுப் பற்றும் கொண்ட பாக்கீர் மாக்கார் அவர்கள் சிவில் டிபென்ட் சேர்விஸில் இணைந்து இந்தியாவுக்குச் சென்று ஹைதராபாத்தில் விசேட பயிற்சிக்காக அனுப்பப்பட்டிருக்கிறார். இது நம்மில் பலர் அறிந்திருக்காத யதார்த்தம். மேலும் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அலவி மௌலானா அவர்கள் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களைப் பற்றி பாராளுமன்றத்தில் பேசிய பொழுது பாக்கீர் மாக்கார் அவர்கள் சர்வதேச தலைவர்களுடனும் தேசிய தலைவர்களுடனும் நெருங்கிப் பழகிய ஒரு தலைவர் என்று சொன்னார். இவ்வாறு அவர் அரசர்களோடும் ஜனாதிபதிகளோடும் பிரதமர்களோடும் நெருங்கிப் பழகிய போதும் கூட அந்த நெருக்கமும் உறவும் அவரை சாதாரண மனிதர்களின் நெருக்கத்தில் இருந்தும் உறவுகளில் இருந்தும் பிரித்துவிடவில்லை. தூரமாக்கவில்லை. அவர் அரசியல் தலைவர்களோடு, ஜனாதிபதிகளோடு, பிரதமர்களோடு நெருங்கிப் பழகியது போலவே சாதாரண மனிதர்களுடனும் நெருங்கிப் பழகினார்.

இவ்வாறு பழகுவதற்குத் தேவையான அந்த பண்பாடு அந்த மனிதாபிமானம் அந்த எளிமை அவரது டிஎன்ஏயில் இருந்தது என்று எங்களுக்குச் சொல்ல முடியும். மேலும் அலவி மௌலான அவர்கள் தொடர்ந்து பேசுகின்ற போது அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரோடு சேர்ந்து தான் பல நாடுகளுக்கு பயணம் செய்திருப்பதாகவும் பல அரசியல் தலைவர்களை சந்தித்ததாகவும் சொல்லிவிட்டு ஒருமுறை ஒருவார காலம் ஈராக்குக்கு பயணம் செய்ததாகவும் அந்த காலப்பொழுதுகளிலே பாக்கீர் மாக்காரோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும் கூறுகிறார். அந்த நாட்களில் எவ்வளவு தான் வேலைப்பளுக்கள் இருந்த போதிலும் அவர் ஒரு நாளும் ஐவேளைத் தொழுகையை என்றுமே விட்டதில்லை என்று சொல்லிவிட்டு அவர் வேலையாக இருந்தாலும் கூட தொழுகைக்கான நேரத்தை அவர் எடுத்துக்கொள்கின்றார் என்பதை என்னால் கண்டுக்கொள்ளக் கூடியதாக இருந்தது என்ற செய்தியையும் அலவி மௌலானா அவர்கள் பாராளுமன்றத்தில் ஹன்சாட் ஏட்டிலே பதிவு செய்திருக்கிறார்.

மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் ஆர். சம்பந்தன் ஐயா அவர்களும் கூட பாராளுமன்றத்தில் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களின் தலைமைத்துவ பண்புகளையும் ஆளுமையையும் பற்றி நிறையவே புகழ்ந்திருக்கிறார். அதுபோலத்தான் முன்னாள் அமைச்சர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் காலஞ்சென்ற எம்.எச்எம் அஷ்ரப் அவர்கள் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் பற்றி பாராளுமன்றத்தில் பேசுகின்ற பொழுது தாம் 25 வருடங்களுக்கு மேலாக பாக்கீர் மாக்கார் அவர்களுடன் நெருங்கிப் பழகுவதாகவும் பாக்கீர் மாக்கார் அவர்களின் எல்லாப் பண்புகளையும் விட தனக்கு மிகப் பிடித்தமானது அவர் ஒரு சிறந்த மனிதாபிமானம் உள்ள மனிதர் என்பதுதான் என்று அமைச்சர் அஷ்ரப் சொன்னார்.

மேலும் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களுக்கு அரசியலைப் பயன்படுத்தி அல்லது தாம் ஒரு பிரபலமான சட்டத்தரணி என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி அவருக்கு நிறையவே பணம் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் இந்த இரண்டு வாய்ப்புகளையும் பயன்படுத்தி அவர் சொத்துச் சேர்க்கவில்லை. பணம் சம்பாதிக்கவில்லை என்பதை அவர் பாராளுமன்றத்தில் அடித்துச் சொன்னதும் ஹன்சாட் ஏட்டிலே பதிவாகியிருக்கிறது.

மேலும் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களின் செயலாளர்களில் ஒருவராக இருந்து பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக இருந்த மர்ஹூம் அஸ்வர் ஹாஜியார் பாராளுமன்றத்திலே பேசுகின்றபொழுது அவர் தன்னைத் தானே ஒரு கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொள்வதாக சொல்லுகின்றார். அதுதான் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்களுக்கு சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் ஏன் இவ்வளவு பெறுமானமும் மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது. இவரை ஏன் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் தலைவர்களும் மக்களும் அன்போடு அரவணைக்கின்றார்கள் என்ற கேள்வியை தனக்குள் கேட்டுக்கொண்டதாகவும் அதற்குரிய பதிலாக ஒரே ஒரு விடயம் அந்த மாமனிதருள் இருப்பதாகவும் அவர் கூறுகின்றார். அதுதான் ளஉெநசவைல. அவரின் சொற்களிலும் செயலிலும் இருக்கின்ற நேர்மை.

மேலும் முன்னை நாள் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராக இருந்த பெற்றி வீரகோன் அவர்கள் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் அவர்கள் பற்றிச் சொல்லுகின்ற போது இந்த மாமனிதர் அவரது வீட்டிலே மனிதாபிமான பண்புகளை வளர்த்திருக்கிறார், ஒரு சிறந்த நாகரீகமான கலாசாரத்தை கொண்டு வந்திருக்கிறார். பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் வழிகாட்டி வளர்த்திருக்கிறார் என்ற செய்தியையும் பாராளுமன்ற ஹன்சாட் ஏட்டிலே படிக்கக்கூடியதாக இருந்தது.

உங்கள் குடும்பத்திற்கு சிறந்தவர் தான் உங்களில் சிறந்தவர் என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தைக்கு ஏற்றாற்போல் இந்த மாமனிதர் ஒரு குடும்பத்தின் சிறந்த தந்தையாக வாழ்ந்திருக்கிறார். ஒரு தந்தையின் வாழ்க்கை அவர் தனிப்பட்ட வெற்றியில் மட்டுமல்ல அவர் வளர்த்த பிள்ளைகளின் நற்பண்புகளிலும் சாதனைகளிலும் பிரதிபலிக்கின்றது. தந்தை என்பது குடும்பத்தின் அடித்தளம். அவர் பேசும் வார்த்தைககளை நாங்கள் சில நேரம் மறந்தாலும் கூட அவர் வாழ்ந்த வாழ்க்கை என்றுமே பிள்ளைகளின் மனதில் பதிந்திருக்கும். கவிஞர் கண்ணதாசன் சொல்வது போல் 'தந்தை நல்லவன் என்றால் பிள்ளை சீரானவன் ஆகின்றான். பிள்ளையின் குணம் மலர்ந்தால் அதன் வேர் தந்தையின் உள்ளத்தில் தான் இருக்கிறது'.

இந்த வரிகள் நமக்கு சொல்லும் உண்மை என்னவெனில் தந்தையின் ஒழுக்கம் தந்தையின் பொறுப்பு, அன்பு இவையனைத்தும் பிள்ளைகளின் உள்ளத்தில் விதைக்கப்படும் விதைகள். அந்த விதைகள் தான் நாளை முளைத்து வளர்ந்து, பூத்து, காய்த்து பண்புகளாக பழுக்கின்றன.

மேலும் கவிஞர் வைரமுத்து அவர்கள் சொல்வது போல 'தந்தையின் நிழல் சூரியனைப் போல பிள்ளைகளின் குணங்களில் மிளிர்கிறது. அந்த ஒளியே அவருடைய உண்மையான பெருமை. தந்தையின் உழைப்பு பிள்ளைகளின் கனவாக மாறுகிறது. தந்தையின் தியாகம் பிள்ளைகளின் வெற்றியாக மாறுகிறது. தந்தையின் நேர்மை பிள்ளைகளின் வாழ்வின் அடையாளமாக மாறுகிறது. தந்தையின் வாழ்க்கை ஒரு கண்ணாடி. அந்த கண்ணாடியிலே பிள்ளைகள் தங்களை தாங்களே காண்கிறார்கள். அந்த கண்ணாடி தூய்மையாக இருந்தால் பிள்ளைகளின் வாழ்க்கையும் தூய்மையாகும் ஒளிமயமாகும். அதுவே ஒரு சிறந்த தந்தையின் அடையாளம். இந்த மாமனிதர் ஒரு சிறந்த தந்தையாக வாழ்ந்து காட்டியிருக்கின்றார் என்பதை அவரது பிள்ளைகளோடு பேரப்பிள்ளைகளோடு நெருங்கிப் பழகுகின்றவன் என்ற வகையில் என்னால் சான்று பகர முடியும்.

# கொழும்பில் கொண்டாடப்பட்ட மலேசிய சுதந்திர தினம்







**(அஷ்ரப் ஏ சமத்)**

மலேசிய நாட்டின் 68வது தேசிய சுதந்திர தினம் கொழும்பு சினமன் லைப் சிட்டி ஹோட்டலில் மலேசிய நாட்டின் இலங்கை மாலைதீவுக்கான உயர் ஸ்தாணிகர் பதில் ஹசாம் ஆதம் தலைமையில் (31) நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு அரசாங்கத்தின் சார்பாக பிரதம அதிதியாக சமுக பாதுகாப்பு அபிவிருத்தி அமைச்சர் டொக்டர் உபாலி பன்னலிகே கலந்து கொண்டார். அத்துடன் மலேசியா நாட்டின் தூதரக அதிகாரிகள், மேல் மாகாண ஆளுனர், பாராளுமன்ற உறுப்பினர்கள் முஜிபுர் ரஹ்மான், ரவூப் ஹக்கீம், காதர் மஸ்தான், மற்றும் பொலிஸ் மா அதிபர், ஏனைய நாடுகளின் தூதுவர்கள், மலே சங்கம், வை.எம்.எம்.ஏ போன்ற சங்கங்களின் உறுப்பினர் களும் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் டொக்டர் உபாலி பன்னலிகே கருத்து தெரிவிக்கையில்..

மலேசிய- இலங்கைக்கான நட்புறவுகள் கடந்த 1957 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்றது. அண்மையில் மலேசியா நாட்டின் பிரதமரை இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோருக் கிடையிலான சந்திப்பில் இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு, கல்வி, ஏற்றுமதி, இறக்குமதி, வர்த்தகம் போன்ற துறைகளில் விரிவாக பேச்சு வாத்தை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் மாவட்ட நீண்ட நாள் செயலாளரான ஹேரத்துக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவித்த ஊடகவியலாளர்கள்

**(எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் மாவட்ட செயலாளராக நீண்ட நாட்களாக கடமையாற்றிய எச்.எம்.எஸ். பீ ஹேரத் செப்டம்பர் மாதம் முதல் களுத்துறை மாவட்ட செயலாளராக இடமாற்றம் பெற்று செல்கின்றார். இவர் புத்தளம் மக்களுக்கு செய்த சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக புத்தளம் மாவட்ட தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஊடக அதிகாரி இந்துனீ தலைமையில் வெள்ளிக்கிழமை (29) புத்தளம் ம ாவட்ட செயலகத்தில்



இடம்பெற்றது .

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு அவருக்கான நினைவு சின்னத்தை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது

## மீலாத் தினத்தை முன்னிட்டு பேருவளை பள்ளிகள் அலங்காரம்





**(பீ.எம். முக்தார்)**

நபிகள் நாயகம் அவர்களின் 1500 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியா பேருவளை எலந்தகொட ஷேகு முஸ்தபா பள்ளிவாசல் அதனை அண்டிய வீதிகள் மின் விளக்குகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தினை முன்னிட்டு பேருவளைப் பகுதியில் உள்ள பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள், தக்கியிக்கள் மற்றும் அரபுக் கல்லூ ரிகள் மின்னொளி கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கு Power Bank வழங்கி வைத்தல் நிகழ்வு



**(இஸட்.ஏ. றஹ்மான்)**

அம்பாறை மாவட்ட ஊடகவிய லாளர் சம்மேளனத்தின் அங்கத்தவர் களுக்கு Power Bank வழங்கி வைக்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் மீரா இஸ்ஸதீன் அவர்களின் தலைமையில் கடந்த 31ம் திகதி நிந்தவூரில் நடைபெற்றது.

இலங்கையில் காணப்படும் பதிவு செய்யப்பட்ட ஊடக அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்கும் ஹாசிம் உமர் பௌண்டேசன் அமைப்பபின் திட்டத்தின் கீழ் அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கு Power Bank வழங்கப்பட்டது.

இன் நிகழ்வின் போது அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் சார்பாக தலைவர் மீரா இஸ்ஸ தீன் ஹாசிம் உமர் பௌண்டேசன் ஸ்தாபக தலைவர் ஹாசிம் உமர் அவர்களுக்கு நன்றியையும் பிரார்த்தனையையும் தெரிவித்தாருந்தார்.

## ஒலுவில் அல் மதீனா வித்தியாலயம் புலமைப் பரீட்சையில் சாதனை

**(இஸட்.ஏ.ஏ. றஹ்மான்)**

2025 ஆண்டுக்கான தரம் -5 புலமைப் பரிசில் பரிட்சையில் ஒலுவில் அல் மதீனா வித்தியாலயம் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று சாதனை படைத்ததுள்ளது. அந்த வகையில் 11 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். ஏனைய மாணவர்கள் 100 புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்றுள்ளனர் **எம்.எப்.சமியுஸ்ரி - 167, எச். பாத்திமா திக்றா - 145, எம்.எஸ்.எப். லூபா நப்லி - 143, என்.ஷெலினா ஷஹீன் - 141, எம்.எச். முஹம்மத் ஹம்தி - 139, ஜே.அலினா மஹாசிம் - 138, எம்.ஏ.அஹமட் அம்ஹர் - 136, ஏ.ஆர்.சிமா ஸைனப் - 136,**



**எம்.ஏ.முகம்மட் அஷ்பாக் - 135, எம்.எஸ்.ஷாட் அல் மலிக் - 132, எம். ஆர்.றிபத் ஸமீஹா - 132**

இம் மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர் ஏ.எல்.எம்.றிஸ்கான் மற்றும் அதிபர் கே.எல்.அமீர் ஆகியோருக்கும் ஒலுவில் மக்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்.

## அனுராதபுரம் ஸாஹிராவில் 8 மாணவர்கள் சித்தி



**(எம்.ரீ.ஆரிப்)**

வெளியிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான 05 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பெறு பேறுகளின் அடிப்படையில் அனுராதபுரம் ஸாஹிரா கல்லூ ரியில் இருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் 08 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தெரிவித்தார்.

இதனடிப்படையில் **யுஸ்ரி ஹயா மர்யம் 157, றமீஸ் சஹ்ரா 156, தர்விஷ் சர்மின் 154 , இஸ்மி றீசா 142 , நபா ஹானியா 142 , பழீல் ஹம்சா 135 , சாஜகான் சசாத் 133 ,ஹன்வஸ் சஹ்னா 133** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இம்மாணவர்களின் வெற்றிக்கு அயராது பாடுபட்ட ஆசிரியர்களான எம்.என்.ஏம். சியாம் , எம்.ஆர்.றைய்ஷா மற்றும் பகுதி தலைவர் ஐ.றிஸ்லியா ஆகியோருடன் பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் என சகலருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேருவளை நகர சபை எதிர் கட்சித் தலைவர் அஸாம் பழீளின் முன்மாதிரிக்கு பாராட்டு



(பீ.எம் முக்தார்)

பேருவளை நகர சபை எதிர் கட்சித் தலைவர் அஸாம் பழீள் தனது முதலாவது சம்பளத் தொகையை பேருவளை மருதானை அல் பாஸியதுன் நஸ்ரியா ஆண்கள் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

அதற்கான நிதியை மேற்படி பாடசாலையில் வைத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் இஸ்ஸத் ஹபீழிடம் கையளித்தார்.

நகர சபை எதிர் கட்சித் தலைவர் அஸாம் பளீல் கருத்துத் தெரிவித்த போது, கடந்த நகர சபைத் தேர்தலில் கொடுத்த வாக்குறுதிக் கமைய எனது சம்பளத்தை பாடசாலை கல்வி நடவடிக்கைக்கு வழங்குகிறேன். எதிர் காலத்திலும் பிரதேசத்தின் கல்வி எழுச்சிக்காக என்னாலான பங்களிப்பை வழங்குவேன்.

அத்தோடு பளீழ் ஹாஜியார் குடும்பத்தினர் அரசியல் மூலமும், தமது சொந்த நிதி மூலமும் கல்வி நடவடிக்கைகளுக் காக தொடர்ந்து பங்களிப்புச் செய்வதையும் அஸாம் பழீல் இங்கு ஞாபக மூட்டினார்.

பேருவளை நகர சபை எதிர்கட்சித் தலைவரின் இந்த முன்மாதிரியை பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் இஸ்ஸத் கபீழ் பாராட்டியதோடு பாடசாலை சமூகம் சார்பில் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் சமூக சேவையாளர் பௌஸான் ஸூபைர், முஹிதீன் ஹம்ஸா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இரத்த அழுத்தம் பரிசோதனை செய்யும் கருவி அன்பளிப்பு



(பீ.எம். முக்தார்)

பேருவளை பொல்பொடுவை தாய், சேய் நிலையத்தில் முக்கிய குறைபாடாக இருந்த இரத்த அழுத்தம் பரிசோதனை செய்யும் கருவியொன்றை சீனங் கோட்டையைச் சேர்ந்த தனவந்தர் ஒருவர் அன்பளிப்பு செய்துள்ளார்.

அந்த கருவியை சமூக சேவையாளர் ரியாத் மசூத் மற்றும் நௌபான் மசூத் ஆகியோரின் முயற்சியால் பெற்றுக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆறு மாணவர்கள் சித்தி



(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இருந்து இம்முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 39 மாணவர்களில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

முஹம்மது சமீம் ஆயிஷா ஐனா -155, வஸீம் ரஜா ஆகில் அஹ்மட் - 144, முஹம்மத் முபீத் ஆயிஷா அத்தியா - 143, முஹம்மத் இஜிலான் பாத்திமா இஷாபா - 137, வஸீம் ரஜா ருக்கையா அலா - 134, முஹம்மது றியாஸ் றஹ்பா -134 ஆகியோர் புத்தளம் மாவட்டத்தின் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று பாடசாலைக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் எஸ் நஸ்மி தெரிவித்துள்ளார்.

அத்தோடு இம் மாணவர்களின் வெற்றிக்கு அயராது பாடுபட்ட வகுப்பாசிரியர்களான ஏ. சீ. எப். நஸ்ரின், ஏ. எல். எப். றிஸ்வானா ஆகியோருக்கும் பெற்றோர்குக்கும் தனது வாழ்த்துக்களை அதிபர் எஸ்.நஸ்மி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பாக நடந்தேறிய 11 ஆவது பாணந்துறை கவிதா வட்ட கவியரங்கு





( ஐ. ஏ. காதிர் கான் )

பாணந்துறை கவிதா வட்டம் (பாகவம்) தொடர் கவியரங்கின் 11 ஆவது கவியரங்கு, கடந்த (31) ஞாயிற்றுக்கிழமை, பாணந்துறை கொரகான கவிதாயினி ருக்ஷானா யஹியாவின் இல்லத்தில் நடைபெற்றது.

கவியரங்கினை கவிதாயினி ருக்ஷானா யஹியா தலைமையேற்று நடாத்தினார்.

பாகவத் தலைவர் கவிஞர் கலைமதி யாஸீன், அமைப்பாளர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் ஆகியோர் நிகழ்வுகளை நெறிப்படுத்தினர்.

11 ஆவது கவியரங்கில் கவிஞர்கள் கலைமதி யாஸீன், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், மஸாஹிரா கனி, ருக்ஷானா யஹியா, மௌலவி ஐ.ஏ. காதிர் கான், முனாஸ் கனி, ஏ.எல்.எம். சத்தார், பாரிஹா பாஷுருக், லைலா அக்ஷியா, கம்மல்துறை இக்பால், வாழைத்தோட்டம் வஸீர், கிண்ணியா அமீர் அலி, ஹேனமுல்லை நழீம், பேருவளை திக்ருல்லாஹ் நாளிர், தொட்டவத்தை ஸஸ்னா ஆகியோரின் கவிதைப் பூக்களால் சபையை அலங்கரிக்கப்பட்டது.

# க . பொ. த உயர் தரப் பரீட்சையில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்



(எம் .ரீ. ஆரிப்)

ஜனாதிபதி நிதியத்தால் செயல்படுத்தப்படும் 2023 / 2024 க . பொ. த உயர் தரப் பரீட்சையில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றவர்களை கௌரவிக்கும் வடமத்திய மாகாண நிகழ்ச்சித் திட்டம் (31) அனுராதபுரம் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உயர்தரப் பரீட்சையில் 06 பாடப் பிரிவுகளின் முதல் 10 இடங்களைப் பிடித்த 241 மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ஷரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதற்காக ஜனாதிபதி நிதியம் 241 மில்லியன் செலவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிச் செயலாளரும் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளருமான ரோஷன் கமகே வரவேற்புரையாற்றியதோடு இத்திட்டத்தின் நோக்கத்தை தெளிவுப்படுத்தினார்.

பிரதான உரையை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நிகழ்த்தியதோடு ஜனாதிபதி நிதியம் அதன் உண்மையான வகிபாகத்தை உணர்ந்து மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்கி வருவதாகவும் அது குறித்து தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினார்.

இதன் போது காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச ஆகியோரும் விழாவில் உரையாற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சேன நாணயக்கார, பாக்யா ஸ்ரீ ஹேரத், நிலவின சமரகோன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஸாதாத் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி



கொடபிடிய அகுறஸ்ஸ ஸாதாத் பாலர் பாடசாலையின் 2025ம் ஆண்டுக்கான சிறார்களின் விளையாட்டுப் போட்டி ஸாதாத் மகா வித்தியாலய மைதானத்தில் (23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இப் போட்டி நிகழ்ச்சிகள் பாலர் பாடசாலை ஆசிரியர்களான ஆ.ஆ.கு. ரிஸானா ஆசிரியை, ஆ.ணு. கரிமுந்நிஸா ஆசிரியை, ஆ.சு. தாஹிரா ஆசிரியை ஆகியோரின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாலர் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும், வினோத உடைப் போட்டியும் இடம்பெற்றதோடு நிகழ்வின் இறுதியில் அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

# மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பின் 25 ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு கலந்துரையாடல்



(கே எ ஹமீட் )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் 25 ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கின்ற நிகழ்வுகளின் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர் தலைமையில் கட்சியின் தேசிய பொருளாளர் ரஹ்மத் மன்சூரின் கல்முனை காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். உதுமாலெப்பை, பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். அப்துல் வாசித் உட்பட கட்சியின் உறுப்பினர்களான எஸ்.எம்.ஏ. கபூர், மன்சூர் ஏ காதர், ஏ.எல். தவம், யூ.எம். வாஹிட் , ஏ.சி. சமால்தீன், உயர்பீட உறுப்பினர் சப்ராஸ் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ். எம். உவைஸ், இறக்காம பிரதேச சபையின் தவிசாளர் எம். முஸ்மி, பொத்துவில் பிரதேச சபையின் பிரதித் ஏ. மாபிர், கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரபாத் பஹுர்தீன்




# இலங்கையை பந்தாடி ரி20 தொடரை சவாலாக்கியது சிம்பாப்வே

சிம்பாப்வே அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் தீர்க்கமான 2ஆவது போட்டியில் துடுப்பாட வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தினால் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் தோற்றுப் போக 3 போட்டிகள் கொண்ட தொடரை 1:1 என சவாலாக்கியது சிம்பாப்வே அணி.

சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி முதலில் 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2:0 என வெற்றி கொண்டிருந்தது.

பின்னர் ஆரம்பித்த 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் கமிந்து மெண்டிஸ் மற்றும் பெத்தும் நிசங்க ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டத்தால் போராடி வென்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில் நேற்று (06) 2 ஆவது தீர்க்கமான போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கமைய களம் நுழைந்த இலங்கை அணியின் துடுப்பாட வீரர்கள் நிலைக்கத் தவறினர். குறிப்பாக அறிமுக வீரரான கமில் மிஸார 20 ஓட்டங்களையும், அணித் தலைவரான சரித் அசலங்க 18 ஓட்டங்களையும், தசுன் ஷானக 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள மற்றைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினர்.

இதனால் 17.4 ஓவர்களில் சகல விக்கட்டுக் களையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது இலங்கை அணி.

இது இலங்கை அணி ரி20 போட்டிகளில் பெற்றுக் கொண்ட 2 ஆவது மிகக் குறைந்த ஓட்டங்களாகும். பந்துவீச்சில் சிக்கந்தர் ராசா மற்றும் பிரட் எவன்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் 81 ஓட்டங்கள் என்ற மிக இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய சிம்பாப்வே அணி 14.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் கலந்து 84 ஓட்டங்களைப் பெற்று சர்வதேச ரி20 அரங்கில் இலங்கை அணிக்கு எதிராக தமது 2ஆவது வெற்றியை பதிவு செய்ததுடன் 3 போட்டிகள் கொண்ட இத் தொடரை 1:1 என சவாலாக்கியது.

துடுப்பாட்டத்தில் முசேகிவா மற்றும் எவன்ஸ் ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 21 மற்றும் 20 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் துஷ்மந்த சமீர 3 விக்கெட்டுகளை சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த உலகக் கிண்ணத்தில் விளையாடுவதா, இல்லையா? இன்னும் தீர்மானமில்லை லயனல் மெஸ்ஸி



எதிர்வரும் 2026ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதா, இல்லையா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று நடப்புச் சம்பியனான ஆர்ஜன்டீனா அணியின் தலைவரும் நட்சத்திர வீரராமான லயோனல் மெஸ்ஸி குறிப்பிட்டுள்ளார்.

38 வயதான லயோனல் மெஸ்ஸி கடந்த வியாழக்கிழமை (04) பியூனஸ் அயர்ஸில் வெனிசுலாவை 3:0 என்ற கணக்கில் வென்ற ஆர்ஜென்டினாவின் போட்டியில் இரண்டு கோல்களை அடித்தார். இது சொந்த மண்ணில் அவர் விளையாடிய இறுதி உலகக் கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டி என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடாவில் விரிவாக்கப்பட்ட போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்றிருந்த நடப்பு உலக சாம்பியன்களான ஆர்ஜென்டீனா தொடக்கம் முதல் இறுதி வரை இந்தப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது.

போட்டியின் பின்னர் எட்டு முறை பாலன் டி'ஓர் விருதினை வென்ற மெஸ்ஸி, அடுத்த ஆண்டு தான் உடல் நிலை எவ்வாரு இருக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டு 2026 உலகக் கிண்ணம் தொடர்பான தனது முடிவு இருக்கும் என்று கூறினார்.

அதாவது, தென் அமெரிக்க உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் இதுவரை 36 கோல்களை அடித்து சாதனை படைத்த மெஸ்ஸி, சர்வதேச அரங்கிலிருந்து விலகுவது இன்னும் கடினம் என்பதை ஒப்புக்கொண்டார்.

அவரது உடல் நிலையினை கருத்திற் கொண்டு அவரது தீர்மானங்கள் அமையும். எவ்வாறெனினும், வெனிசுலாவுக்கு எதிரான ஆர்ஜென்டினாவின் வெற்றி அவர்களின் தலைவருக்கு ஒரு உணர்ச்சிபூர்வமான இரவை உறுதி செய்தது மட்டுமல்லாமல், 2026 ஆம் ஆண்டுக்குள் உறுதியான போட்டியாளர்கள் என்ற அவர்களின் நிலையை அடிக்கோடிட்டுக் காட்டியது.

# அல் மின்ஹாஜின் கிரிக்கெட் பியஸ்டா- 2025 சம்பியனானது ஆர்.ஆர் நைட் ரைடர்ஸ்




மதுரங்குளி பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் பியஸ்டா 2025 இன் சம்பியன் மகுடத்தை ஆர்.ஆர் நைட் ரைடர்ஸ் அணி தனதாக்கிக் கொண்டது.

74 வருட வரலாற்றினைக் கொண்ட மதுரங்குளி பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த முதலாவது பழைய மாணவர்களுக்கு இடையிலான அணிக்கு பதினொரு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 29,30 மற்றும் 31 ஆம் திகதிகளில் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது.

மொத்தமாக பழைய மாணவர்களை உள்ளடக்கிய 7அணிகள் இத் தொடரில் பங்கேற்றன. இதற்கான 7 அணிகளையும் 7 உறுமையாளர்கள் பெற்றிருந்ததுடன் வீரர்களும் ஏலம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர்.

அதனடிப்படையில் ஒரு அணி மற்றைய 6 அணிகளுடன் முதல் சுற்று லீக் ஆட்டத்தில் மோதியிருந்தது. பின்னர் குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளான ஆர். ஆர். நைட் ரைடர்ஸ் அணியும் எம்.ஆர். எப். டஸ்கஸ் அணியும் முதல் குவளிபயர் போட்டியில் மோதின. அதில் எம். ஆர். எப் டஸ்கஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பின்னர் இடம்பெற்ற முதல் எலிமினேட்டர் போட்டியில் 3ஆம் , 4ஆம் இடம் பெற்ற கொழும்பு ட்ரேடர்ஸ் மற்றும் பெருக்குவட்டான் சுப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் மோதின. இதில் கொழும்பு ட்ரேடர்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தது. பின்னர் இடம்பெற்ற 2ஆவது குவளிபயர் போட்டியில் முதல் குவளிபயர் போட்டியில் தோற்ற ஆர்.ஆர். நைட் ரைடர்ஸ் அணியை கொழும்பு ட்ரேடர்ஸ் அணி எதிர் கொண்டது. இப்போட்டியில் போராடி வென்ற ஆர்.ஆர். நைட் ரைடர்ஸ் அணி மீண்டும் இறுதிப் போட்டியில் எம்.ஆர். எப் டஸ்கஸ் அணியை எதிர்த்தாட தகுதி பெற்றது.

இதற்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்ற இறுதிப் போட்டியில் எம்.ஆர்.எப். டஸ்கஸ் அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மிக இலகுவாக வீழ்த்திய ஆர்.ஆர். நைட் ரைடர்ஸ் அணி முதல் முறையாக சம்பியன் மகுடத்தை தனதாக்கி அசத்தியது.




# சர்வதேச ரி20 போட்டிகளுக்கு விடைகொடுத்தார் மிச்செல் ஸ்டார்க்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளரான மிட்சல் ஸ்டார்க் சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் கவனம் செலுத்த இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

இதை கிரிக்கெட் அவுஸ்திரேலியா சபை உறுதி செய்துள்ளது. 35 வயதான ஸ்டார்க், கடந்த 2012ஆம் ஆண்டில் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் தனது முதல் போட்டியில் விளையாடி இருந்தார்.

மொத்தம் இதுவரையில் 65 போட்டிகளில் விளையாடி, 79 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இறுதியாக கடந்த ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக் கிண்ண தொடரில் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடி இருந்தார். இந்த சூழலில் சர்வதேச ரி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து ஸ்டார்க் குறிப்பிடுகையில், "இப்போதும், எப்போதும் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கே நான் முன்னுரிமை கொடுப்பேன். அவுஸ்திரேலிய அணிக்காக நான் விளையாடிய ரி20 கிரிக்கெட் போட்டியின் ஒவ்வொரு நிமிடமும் இனிதானது.

கடந்த 2021ஆம் ஆண்டில் நாங்கள் ரி20 உலகக் கிண்ணத்தை வென்றோம். எதிர்வரும் ஆஷஸ் தொடர், இந்தியாவில் நடைபெறும் டெஸ்ட் தொடர், 2027ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒருநாள் உலகக் கிண்ண தொடரில் விளையாடும் வகையில் நான் என்னை புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதன் மூலம் என்னால் உடற்தகுதியுடன் இருக்க முடியும். அதேநேரத்தில் அடுத்த ரி20 உலகக் கிண்ண தொடருக்கான பந்துவீச்சை யூனிட்டை தயார் படுத்தவும் இது வாய்ப்பளிக்கும் என கருதுகிறேன்." என ஸ்டார்க் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.